தேசிய கட்டிட
ஆராய்ச்சி
நிறுவனம்

# 2011 ஆண்டறிக்கை

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | **பக்கம்** |
| நோக்கு, பணிக்கூற்று மற்றும் கூட்டிணைப்பு குறிக்கோள்கள் | 3 |
| பேசுழுவின் முகாமைத்துவம் | 4 |
| தலைமையாளரின் பார்வையில் | 5 |
| பணிப்பாளர் நாயகத்தின் பார்வையில் | 7 |
| தொழிற்பாட்டு ரீதியான வெளிப்படுத்தல்கள் 2011 | 14 |
| நிதியியல்ரீதியான வெளிப்படுத்தல்கள் | 17 |
| நிதியியல் நிலமையின் அறிக்கை | 19 |
| நிதியியல் செயற் பெறுபேற்றின் அறிக்கை | 20 |
| நிதி பாய்ச்சல் அறிக்கை | 21 |
| கணக்குகளுக்கான குறிப்புகள் | 22 |
| மனிதவள மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 24 |
| தேசிய நிகள்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுகை | 26 |
| ஆட்சேர்ப்பு, மற்றும் இளைப்பாறுகை மற்றும் இராஜினாமா | 26 |
| உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளில் பங்குபற்றுகை | 28 |
| இணைப்பு – பிரிவுரீதியான செயற்பெறுபேறு | 31 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 40 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள் | 52 |

## நோக்கு

"அனர்த்த தடுப்புக் கலாச்சாரத்தை கட்டியெழுப்புதல்"

## பணிக்கூற்று

ஆராய்ச்சி, அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் தக்கவைத்திருத்தலும் அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் பாதுகாப்பான சூழலைக் கட்டியெழுப்புதலுக்காக தொழிநுட்ப சேவைகளை வழங்குதல்

## கூட்டிணைப்பு குறிக்கோள்கள்

- **DRR**இல் மிகச் சிறப்பான மையமாக உருவாகுதல் மற்றும் பாதுகாப்பாகக் கட்டியெமப்பப்பட்ட சுற்றாடலை நிச்சயப்படுத்துதல்
- நிறுவனரீதியான நிலைத்திரு தகவை நிச்சயப்படுத்துதல்
- தகவுடைய தொழில்நுட்ப வழங்குனராக உருவாகுதல்
- மண்சரிவுகள் மற்ம் சம்பந்தப்பட்ட புவியியல் ஆபத்துகளுக்கான தேசிய குவியப்புற்றியாக தொடர்ந்து செயற்படுதல்
- தொழில்நுட்ப தகவல்களுக்கான மையமாக தொடர்ந்திருத்தல்

## NBROவின் முகாமைத்துவம்

**விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்**

**கௌரவ. மகிந்த அமரவீர**
அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ. டுலிப் விஜேசேகர**
அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**இடைக்கால முகாமைத்துவக் குழு**

**திருமதி. எஸ். ஏம்.முகமட் (தலைமையாளர்)**
செயலாளர், இடர் முகாமைத்துவ அமைச்சு

**எந்திரி(கலாநிதி).ஆசிரி கருணாவர்த்தன**
பணிப்பாளர் நாயகம், NBRO

**திரு.ஜி.பி.சமரசிங்க**
பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம்

**மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி (ஓய்வு)**
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்

**திரு. சுஜீவ விஜேசிங்க,**
பிரதி பொது முகாமையாளர்
மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்

**திருமதி. குணவாத்தன**
மேலதிக பணிப்பாளர் நாயகம,
பொது நிதிகள் திணைக்களம்

**சிரேஷ்ட முகாமைத்துவம்**

**எந்திரி(கலாநிதி).ஆசிரி.கருணாவர்த்தன**
பணிப்பாளர் நாயகம்
**திரு.என்.சி.டி.பெரேரா**
தலைவர், சுற்றாடலியற் பிரிவு
**திரு.ஆர்.எம்.எஸ்.பண்டார**
தலைவர், மண்சரிவு ஆய்வுகள் மற்றும் சேவைகள் பிரிவு
**திரு.கே.சி.சுகதபால**
தலைவர், மானிடக் குடியிருப்புக்கள் பிரிவு
**திருமதி.ஜே.கே.ஜயவர்த்தன**
தலைவர், செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு
**திருமதி.கே.எஸ்.முத்துரட்ன**
தலைவர், கட்டிடத் திரவியங்கள் பிரிவு
**திருமதி. பி.எச்.கே. டி. சில்வா**
தலைவர், புவித்தொழிநுட்ப பொறியியல் பிரிவு
**திருமதி.என்.விஜேகுணவர்த்தன**
தலைவர், மனிதவளங்கள் முகாமைத்துவப் பிரிவு
**திருமதி.ஆர்.துடுகல**
தலைவர், நிதிப் பிரிவு

தற்போது NBROவினை நிர்வாக, நிதியியல் மற்றும் முகாமைத்துவ ரீதியாக வழிநடாத்தும் மற்றும் நெறிப்படுத்தம் தலைமையாளராக அமைய அமைச்சின் செயலாளருடனான இடைக்கால முகாமைத்துவக் குழுவை (IMC) அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

# தலைமையாளரின் பார்வையில்



னர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளராகவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுவின் தலைமையாளராகவும் NBROவின் 2011 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கான NBROவின் ஆண்டறிக்கையை உங்கள் முன் வைப்பதில் மகிழ்வடைகிறேன்.

தேசிய அபிவிருத்திக்கு முக்கியத்துவமான பங்களிப்பை செய்யும் முன்னிலையான பல்துறை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக NBROவின் தொழிநுட்ப ஆற்றல்கள் மற்றும் அதன் நிதியியல் நிலைத்திருதகவின் முழுமையான குறுக்கு வெட்டுத் தோற்றமொன்றை இவ்வறிக்கை வெளிப்படுத்துகிறது.

அறிக்கையிடும் காலப்பகுதியின் போது மண்சரிவு ஆபத்து அடையாளங்காணல் வலையமாக்குதல், வரைபடமாக்கல், அறிவூட்டுதல், கட்டுப்படுத்துதல் என பொதுவாக அறியப்படும் பல்வகுப்பாக்கப்பட்ட விடயப்பரப்புக்களில் நன்கு செயறபட்டது. NBROவிலுள்ள மண்பரிசோதனை ஆய்வுகூடங்கள் 25 வருடங்கள் பழமையானது. அங்கு நாட்டில் மிகப்பாரிய அபிவிருத்திச் செயற் திட்டங்களில்
புவித் தொழிநுட்பவியல் கண்டறிவுகள் செய்யப்பட்டிருந்தன. நிர்மாணத்திற்கு பொருத்தமான கட்டிடப்பொருட்களின்ட பரிசோதனை மற்றும் சான்றுப்படுத்துதல்கள் அதன் நன்கு உபகரணமயப்படுத்தப்பட்ட திரவியங்கள் ஆய்வுகூடத்தில் செய்யப்படுகின்றன. ஒருதனித்துவமான சேவையான சேதமடைந்த கட்டிடங்களின் நிலைமை அறிக்கையிடுதல் மற்றும் நிர்மாண செயற்திட்ட முகாமைத்துவம் என்பன செயற்திட்ட முகாமைத்துவ விடயப் பரப்பில் தரப்படும் சில சேவைகளாகும். மனித குடியமர்வு திட்டமிடுதல் செலவுப் பயன்விளைவான வீடமைப்பு அபிவிருத்தி என்பன சேவைகளில் சிலவாகும். மனிதர்கள் மற்றும் சுற்றாடலியல் பாதுகாப்பை நிச்சயப்படுத்தும் நீர், கழிவுநீர், மண், வண்டல், வளி மற்றும் வெளிவிடுகைகள் என்பவற்றின் சுற்றாடலியல் தர மதிப்பீடு மற்றும் தாக்க ஆய்வுகள் மற்றும் நிலைமை முகாமைத்துவத்திற்கு இட்டுச் செல்லும் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் NBROவிலிருந்து பரந்தளவில் நாடப்படும் ஏனைய சேவைகளாகும். 2011ஆம் வருடத்தின் போது எனது அமைச்சிற்கான அனர்த்தம் தொடாபான நடவடிக்கைகளில் NBROவின் தொழிநுட்ப ஒத்துழைப்பு மெச்சத்தக்கது.

கடந்த இருவருடங்களின் போது பல கடினமான நிலமைகள் எதிர்கொள்ளப்பட்ட போதிலும் 2011ஆம் வருடம் மிகவும் சாதகமான வருடமாக நிரூபிக்கப்பட்டதை நான் மகிழ்வுடன் அறிவிக்கிறேன். NBROவானது உறுதிப்படுத்தப்பட்ட 182மில்லியன் ரூபா வருமானத்தைப் பதிவு செய்ததுடன் இது கடந்த வருடத்திலும் பார்க்க 43% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. 2011இல் NBROவின் வாடிக்கையான சேவைகள் சுமார் 108 மில்லியன் ரூபாயில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை (53%) காட்டுகின்றன.

வருமான வளர்ச்சியும் நாட்டில் ஆபத்தான மண்சரிவுகளை கட்டுப்படுத்துதல் மற்றும் ஸ்திரப்படுத்துதல்களில் அடியெடுத்து வைத்ததால் ஏற்படுத்தப்பட்டது. இது NBRO வின் எதிர்காலத்தை நெறிப்படுத்தும் மற்றும்

திசைமுகப்படுத்தும் ஓர் தீர்மானகரமான செயலாகும். 2011 மார்ச்சிலிருந்து, மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக NBROவினால் மண்சரிவு விடுவிப்புச் சான்றிதழ் அல்லது பரிந்துரைகள் வழங்கப்படுவது, உள்ளூர் அதிகாரசபைகளினால் கட்டிட அனுமதி வழங்கப்படுவதற்கு ஓர் முற்தேவையாகியுள்ளது. மண்சரிவு கட்டுப்படுத்துகை செயற்திட்டங்கள் பாரிய செயற்திட்டங்களில் இறங்குவதற்கு NBROவின் ஆற்றலை ஊக்கியுள்ளதுடன் பணியாளர் சேர்ப்பு, உபகரணக் கொள்வனவு மற்றும் விஸ்தாரமான பாதிடுகைகளை நாடுகிறது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழுள்ள தொழிநுட்ப நிபுணத்துவமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமொன்றாக NBROவிற்கு இனிவரும் வருடங்கள், அதிலும் அனர்த்தங்களின் அதிகரிக்கும் போக்கு மற்றும் அபிவிருத்திக்கான கிராக்கிகளினால், சவாலாகவிருக்கும். அனர்த்தங்களின் சிக்கலான மற்றும் சவாலான நிலமைகளில் கவனம் செலுத்துவதற்கு NBRO நிறுவக கலாச்சாரமொன்றை பேணவேண்டியிருப்பதுடன் ஆக்ககரமான உபாயங்களை விருத்தி செய்யவேண்டும். அத்துடன் அமைச்சுடன் அதன் நெருக்கத்தை வலுப்படுத்துவதன் மூலம் பரந்த வகிபாகமொன்றைச் செய்ய இயலுமாவதுடன் வேகமான – சவாலுக்குரிய இயங்கு சூழலில் மேலும் இலாவகமாக செயற்பட NBROவை இயலுமாக்கும்.

இறுதியாக, எமது வழியில் அமைந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஈடுபடுவதற்கு சகிப்புத் தன்மையான கடப்பாடு மற்றும் விசுவாசத்துடன் பணியாற்றிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஆசிரி கருணாவர்த்தன மற்றும் அவரது குழுவை பராட்டுவதற்கு இச்சந்தர்ப்பத்தை நான் உபயோகிக்கிறேன். NBROவின் முதுகெழும்பாகவுள்ள இந்த மறுக்கமுடியாத போட்டித் தன்மையான குழு, அவர்களது அறிவு, தகமை மற்றும் புலமைத்துவம் என்பவற்றிற்கு எமது செயற்பெறுபேற்றின் தரம் சமர்ப்பிக்கப்படுகிறது. அவர்கள் சவால்களுடன் ஈடுபட சக்தி மற்றும் ஆர்வத்துடன் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இடைக்கால முகாமைத்துவக் குழுவின் அங்கத்தினருக்கு எனது உண்மையான நன்றியை தெரிவிக்கிறேன். அவர்களது தூரநோக்கும் தலைமைத்துவமும் NBROவை வெற்றிக்கு இட்டுச்சென்றது. இதற்கும் மேலதிகமாக, எமது உறுதித் தன்மை மற்றும் எம்மீது வைத்த நம்பிக்கைக்காக எனது நன்றியைக் கூறுகின்றேன்.

எமது நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்பிற்கு எமது பிரயத்தனங்கள் மற்றும் பங்களிப்பில் பெரிய பெறுமானத்தை உருவாக்குவதற்கு பாடுபடுவதற்கு நாம் ஒன்றுபட்டு இருப்போம் என நான் நிச்சயப்படுத்துகிறேன்.

எஸ்.எம்.முகமட்
தலைமையாளர்
இடைக்கால முகாமைத்துவக் குழு
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
(செயலாளரர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு)

# பணிப்பாளர் நாயகத்தின் பார்வையில்



31 டிசம்பர் 2011இல் முடிவுறும் வருடத்திற்கான ஆண்டறிக்கை மற்றும் நிதியியல் அறிக்கைக்கான பிரசன்னப்படுத்துவது எனது மகிழ்ச்சியைத் தருகிறது.

NBRO ஓர் பொது நிறுவனமாக சகல விடயப்பரப்புக்களிலும் அதன் செயற்பெறுபேற்றை திறம்படச் செய்தும் அதனது கூட்டிணைப்பு குறிக்கோள்களை வெற்றிகரமாக அடைவதை நோக்கி முன்னேறிய நிலையில் வருடம் முடிவடைகிறதாக பார்க்கப்படுகிறது. தேசிய அபிவிருத்திக்கான கிராக்கியின் அதிலும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையில் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக 2 வருடங்களுக்கு முன்னர் NBRO உருவாக்கப்பட்டது. தற்போதுள்ள அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பொறுப்பளிப்பை ஈடுசெய்யும் முகமாக, 'அனர்த்த அபாயக் குறைப்பை' பிரதான குவியப்பொருளாக எடுத்து கூட்டிணைப்புத் திட்டம் மற்றும் பெரும்பாலான நடவடிக்கைகள் மீள வடிவமைக்கப்பட்டன. தற்போது NBROவானது, நாட்டில் அனர்த்தத்திற்கு ஈடுகொடுப்பை கட்டியெழுப்பும் முகமாக அனர்த்த முகாமைத்துவத்துடன் கரிசனைக்குரிய சகல விடயங்களிலும் விசேட மீட்டலுடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருப்பொருளுடன் இயங்கி வருகிறது.

அனர்த்த அபாய கட்டுப்படுத்துகையில் முன்னிலை அமைப்பொன்றாக அத்துறையில் மிகவும் மதிக்கப்படும் மற்றும் நன்கு முகாமைத்துவம் செய்யப்படும் அமைப்பாக குறிப்பிடத் தக்கதாக NBRO வந்துள்ளது. இன்று நாட்டில் மிகவும் நம்பத் தகுந்த தொழிநுட்ப சேவை தருனர்களில் ஒன்றாக அத்துறையில் ஏற்றுக்கொள்ளப்படுதலை கட்டியெழுப்புகிறது.

**நிபுணத்துவம்**

NBRO, ஆராய்ச்சி அமைப்பு மற்றும் தொழிநுட்ப சேவை வழங்குனராக அதன் ஏற்றுக்கொள்ளப்படுகையுடன், அனர்த்த ஆய்வுகள், கட்டிடத் திரவியங்கள், சுற்றாடலியல், புவித் தொழிநுட்பவியல் மற்றும் நிர்மாணப் பொருளியல் மற்றும் நகர மற்றும் மானிட குடியிருப்புக்கள், திட்டமிடுதல் போன்ற விடயப்பரப்புக்களில் ஊக்கமான வகிபாகத்தைச் செய்து வருகிறது. மண்சரிவு ஆபத்து மற்றும் சாய்வு ஸ்திரமின்மை ஆய்வுகளில் மற்றும் அவற்றின் கட்டுப்படுத்துகையில் தகுதியுள்ள நிறுவனமொன்றாக அதன் ஆற்றலை NBRO தாபித்துக் கொண்டுள்ளது. நாம் தற்போது, மண்சரிவுகள் மற்றும் அதனுடன் தொடர்பான புவியியல் ஆபத்துக்களுக்கான தேசிய குவியப்புள்ளியாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.
பொறுப்பளிக்கப்பட்டதன்படி, மண்சரிவு அழுத்தங்களை இனங்காண்பது மற்றும் ஆபத்து தேசவரைபடமாக்கங்களுக்கான கள ஆய்வுகளை NBRO மேற்கொண்டு வருகின்றது. மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில், அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக மண்சரிவு விடுவிப்புச் சான்றிதழ் அல்லது அறிக்கை வழங்குவது கட்டிட உள்ளூர் அதிகாரசபைகளினால் அனுமதி வழங்குவதற்கு முற்தேவையாகியுள்ளது.

கட்டிடத் திரவியங்கள் ஆய்வுகூடமான நிர்மாணத் துறைக்காக பரிசோதனைச் சான்றிதழ்கள் தருவதற்கும் SLSI இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கட்டிடக்கலை,

கட்டமைப்பு மற்றும் கட்டிடசேவைகள் வடிவமைப்பு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவச் சேவைகளை நிர்மாணத்துறைக்குத் தருதல் மற்றும் அதற்கும் மேலதிகமாக சேதமடைந்த கட்டிடங்களை மதிப்பீட்டாய்வு செய்வது NBRO தற்போது விசேடத்துவம் பெற்றுள்ள குறிப்பிடத்தக்க முக்கியத்துவமான சேவையாகும். துளையிடல் ஆய்வுகூட பரிசோதனை அடங்கலாக புவித்தொழிநுட்பவியல் ஆய்வுகள் மற்றும் அத்திவார வடிவமைப்பு மற்றும் சம்பந்தப்பட்ட கட்டமைப்புக்களில் நிபுணத்துவ சேவைகளைத் தருதல்களை மேற்கொள்வதற்கு ஓர் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக எமது ஏற்புடமையை நாம் தாபித்துள்ளோம். EIA, SEA போன்ற ஆய்வுகள் மற்றும் இணக்கப்பாட்டு கண்காணிப்புக்களுக்காக சுற்றாடலியல் பரிசோதனைச் சேவைகளைத் தருவதற்கு ஓர் ஏற்றுக்கொள்ளத்தக்க நிபுணத்துவ அமைப்பாக சுற்றாடலியல் ஆய்வுகூடமானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இன்றைய செயற்பெறுபேறுகளுடன், அனுபவமுள்ள வெற்றிகரமான தொழிநுட்பச்சேவை வழங்குனராகியுள்ளதுடன் பல்துறைகளில் பரந்த வீச்சுக்கு அதன் நிபுணத்துவத்தை விரிவாக்கியதன் பிற்பாடு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக வளர்ந்துள்ளது.

**வருமானம்**

தேசிய முன்னுரிமையாக, மண்சரிவு அனர்த்த அபாய கட்டுப்படுத்துகைக்காக இலங்கை அரசாங்க நிதி தரப்படுகிறது. இதற்கும் மேலதிகமாக, வருடாந்தம் ஆய்வுகூட மற்றும் கள உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மூலதனச் செலவாக இலங்கை அரசின் நிதியை NBRO பெறுகிறது. சில சந்தர்ப்பங்களில், NBROவின் ஆராய்ச்சி மற்றும் செயற்திட்ட வேலைகளுக்காக வெளிநாட்டு நன்கொடை முகவரகங்கள் மற்றும் கூட்டுழைப்பு நிறுவனங்கள் நிதியைத் தருகின்றன.

எவ்வாறாயினும், NBRO பெரிதும் சுயசம்பாத்தியத்தில் தங்கியுள்ளதுடன் அதன் நடைமுறைச் செலவீனம் அடங்கலான நிதியியல் தேவைப்பாடுகளில் பெரும்பாலானவை அரச மற்றும் தனியார் துறைக்கு தரப்படும் உசாத்துணை மற்றும் பரிசோதனைச் சேவைகளினூடாக உருவாக்கப்படுகிறது. 2007இலிருந்து 2011 வரை தொடர்ச்சியாக ஓர் தேறிய இலாபம் பதிவு செய்யப்பட்டதுடன் பார்வையிலுள்ள இந்த வருடத்தின் உறுதியாக்கப்பட்ட வருமானம் NBRO வின் வரலாற்றில் ஆகக்கூடியது என அறிவிக்கப்பட்டது. இது முன்னைய 2010ஆம் வருடத்திலும் பார்க்க 43% ஆன பொருளாதார வளர்ச்சியை பிரதிபலிக்கும் 182 மில்லியன் ரூபாவாகும். பரிசோதனை மற்றும் தொழிநுட்பச்சேவைகள் 2011இல் கிட்டத்தட்ட 108 மில்லியன் ரூபாயளவு மறுக்கமுடியாத வளர்ச்சியை காட்டின. அங்கு மண்சரிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி வேலைகளுக்கான அரச மானியம் 73மில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளது.

**தேசிய அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பு**

தேசிய பங்களிப்பில் அரசாங்கத்திற்கு உதவுவது எமது குறிக்கோள்களில் ஒன்றாகும். ஆயின் அனர்த்த அபாய குறைப்பினூடாக வறுமையை அகற்றுவதன் மூலம் வாழ்வின் தரத்தை செழுமைப்படுத்தும். அனர்த்த அபாய குறைப்பில் NBROவின் இலக்குகள், மண்சரிவு கட்டுப்படுத்துகை, பொருத்தமான நிலப்பாவனை செய்முறைகள், வலு இயல்புகளுக்காக கட்டிடத்திரவியங்களை பரிசோதித்தல் மற்றும் உறுதிப்படுத்தல், சுற்றாடல் இணக்கப்பாட்டிற்காக நீர், வளி மற்றும் இரைச்சல் கண்காணிப்பு, மண்ணின் பொருத்தமான பரிசோதனை போன்ற களங்களில் பல்வகுப்பாக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு ஆபத்து காரணமான பாதிப்பு ஏதுநிலையானது, மண்சரிவு அனர்த்த அபாய குறைப்பில் NBROவின் முன்னிற்பான ஈடுபாடு காரணமாக கடந்த தசாப்தங்களில் முக்கியத்துவமான அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. NBROவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்,

மண்சரிவு தேச வரைபடமாக்கம், கண்டறிவுகள், அபாயத்தின் தொடர்ச்சியான கண்காணிப்பின் அடிப்படையிலான அவசரநிலையில் முன்னெச்சரிக்கை வழங்குதல், ஆபத்து கட்டுப்படுத்துகை மற்றும் பாதிப்பு ஏதுநிலையிலுள்ள சமூகங்களிற்கு பயிற்சி மற்றும் அறிவூட்டுதல் போன்ற வீச்சினுள் உள்ளது. மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் ஏதும் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக மண்சரிவு விடுவிப்புச் சான்றிதழ்களை பெறுவது, உள்ளூர் அதிகாரசபையினால் வழங்கப்படும் கட்டிட அனுமதிக்கு ஓர் முற்கோரலாகிறது. இவை தேசிய அனர்த்த அபாய குறைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் முதன்மை சாதனங்களாக உருவெடுத்துள்ளன. இதன்மூலம் நன்கு திட்டமிடப்பட்ட அபாய முகாமைத்துவ முறைமைகளின் ஊடாக மலைநாட்டு அபிவிருத்தியில் முதலிடுவதற்கு அரசாங்கத்திற்கு இயலுமாகியுள்ளது. ஆயின் இது அனர்த்த நிவாரணம் மற்றும் மீட்டில் மறுக்கமுடியாத சேமிப்பை செய்துள்ளது.

NBROவின் நிபுணத்துவத்தின் ஏனைய விடயப் பரப்புக்களில் நிறுவனத்தால் தரப்பட்ட தொழிநுட்ப சேவைகளும் கூட நாட்டில் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி, வளங்களைப் பாதுகாத்தல், பெறுபேறுகளை சிறப்பு உச்சமாக்குதல் மற்றும் அழுத்தமான சுற்றாடலியல் மற்றும் அனர்த்த தாக்கங்களைக் குறைத்தல் என பங்களித்துள்ளன. ஆதலால் தேசிய பாதீட்டில் முக்கியத்துவமான சேமிப்பு செய்யப்பட்டுள்ளது.

**நிறுவக ரீதியான முன்னேற்றங்கள்**

ICTAவின் கூட்டுழைப்புடன் NBROவின் புதிய வலைத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்க உதவியுடன் உபகரண ஆற்றலை எம்மால் வலுப்படுத்த இயலுமாகியது. மண்சரிவு மற்றும் புவித்தொழிநுட்பியல் கண்டறிவுகளுக்காக சுமார் 11மில்லியன் ரூபாவை செலவிட்டு Resistivity Sounding & Imaging System கொள்வனவு செய்யப்பட்டமை ஓர் குறிப்பிடத்தக்க அடைவாகும். 2010 மானியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட Triaxial shear Testing உபகரணம் புவித்தொழிநுட்பப் பொறியியல் ஆய்வுகூடத்தில் 2011 இன் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசேட புவித்தொழிநுட்பவியல் கண்டறிவுகளை மேற்கொள்வதற்கான இந்த பகுதியளவில் தன்னியக்கமானது உபகரணத்திற்காக சுமார் 50மில்லியன் ரூபாய்களை அரசாங்கம் செலவிட்டது. இது இலங்கையிலுள்ள ஆய்வுகூடங்களில் அரிதானதொன்றாகும். அனேகமாக சகல விஞ்ஞானிகளுக்கும் வினைத்திறனை அதிகரிப்பதற்காக கணணிகள் தரப்பட்டுள்ளன. கட்டிடத் திரவியங்கள் பிரிவு மற்றும் நிர்வாகக் கட்டிடத்தை விரிவுபடுத்துவதற்காக IMCயிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. புதிய ஆட்சேர்ப்புத் திட்டமும் பதவி உயர்வும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011இன் பிற்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நன்கு திட்டமிடப்பட்ட பணியாளர் அபிவிருத்தித் திட்டமொன்று நடைபெறுகிறது. எமது விஞ்ஞானிகளுக்கு, அவர்களது அனுபவம் மற்றும் அறிவை விரிவாக்குவதற்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் கிடைக்கச்செய்யப்படும்.

NBROவில் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் அண்மைய மீள் செயற்படுகையானது, கடந்த காலங்களில் செயற்பாடற்று காணப்பட்ட ஆராய்ச்சிக் குழுவின் செயற்பாடு தொடர்வதை அவசியமாக்கியுள்ளது. அண்மைய ஆராய்ச்சிக் குழுவானது, NBROவின் விஞ்ஞானத் துறையின் செயற்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளக மற்றும் வெளியக அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. ஆய்ச்சிக் குழுவின் முதன்மை நோக்கங்கள், நிறுவனத்திற்குள் சகல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளையும் மையப்படுத்தி மற்றும் ஒருவழிப்படுத்துதல், நிறுவனத்தினுள் ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை மேம்படுத்துதல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு வசதியளித்தல் போன்றனவாகும்.

**தனியார் துறையுடன் பங்குடமை**

உயர் தொழிநுட்ப உசாத்துணைகளில் தனியார்துறை ஈடுபடுதல் நிறுவனத்தினால் ஊக்குவிக்கப்படுவதுடன் சிக்கல் மிகுந்த செயற்திட்டங்களில் தனியார் துறையுடன் NBRO கூட்டிணைகிறது. மேலும் புவித்தொழிநுட்பவியல் பொறியியல், சுற்றாடலியல் பரிசோதனை மற்றும் மதிப்பீடுகள், மண்சரிவு ஆபத்து அபாய மதிப்பீடு, கட்டிடத் திரவியங்கள் பரிசோதனை போன்ற பல்துறைகளில் NBROவின் சேவைகளை வேலை தருனர்கள் தொடர்சீராக நாடுவதனால் தனியார் துறையுடன் பலமான நெருக்கத்தை நிறுவனம் பேணிவருகின்றது.

**நெருக்கடிகள்**

NBRO அதன் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு பல தடைகள் காணப்படுவதுடன் அவையாவன;

- ஏனைய உதாரணமான அரசதுறை நிறுவனங்களைப் போலல்லாது NBRO ஒருபோதும் பாராளுமன்ற சட்டமூலம் ஒன்றினால் தோற்றுவிக்கப்படவில்லை. அதிலும் அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலம் NBRO தாபிக்கப்பட்டிருக்கின்றது. NBROவிற்கான சட்டமொன்று இல்லாமை பெரிய தடையாக இருந்து வருகின்றது. பாராளுமன்ற சட்டமொன்றினால் தாபிப்பதற்கான முயற்சிகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. எவ்வாறாயினும் NBROவிற்கான சட்டமொன்றை வரைவதற்கு 2009இல் அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் பின்னர் அனுமதிக்கப்பட்டது. NBROவை அடுத்துவரும் நிறுவனமொன்றின் உருவாக்கத்திற்காக சட்டமொன்று கவனமாகவும் முறையாகவும் வரையப்பட்டது. நகலானது மீளாய்வு செய்யப்பட்டதுடன் பங்கீடுபாடுடையோரின் ஆலோசனைக்கு பிரசன்னப்படுத்தும் கட்டத்தை அடைந்துள்ளது. இந்த தடையைத் தாண்டுவதற்கு நிறுவனமாக்கச் செயற்பாடு வேகப்படுத்தப்படவேண்டும்.

- சட்டமொன்று இல்லாமை காரணமாக கூட்டிணைக்கப்பட்ட அமைப்பாக NBRO கருதப்பட்டிருக்கவில்லை. இது NBROவின் ஆய்வுகூடங்களுக்கு அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தடையாகவுள்ளது.

- இருப்பினும் NBROவிற்கான ஆளணி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வருடத்தின் இறுதியில் SOR அங்கீகரிக்கப்பட்டது. இது உரிய காலத்தில் பொருத்தமான நபர்களை சேர்ப்பதை தடுத்தது. ஏனைய தொழில்கள் உயர்வான ஊதியம் மற்றும் நலன்களை தருவதனால் ஏற்கனவேயுள்ள ஆளணியினர் விலகுவதன் காரணமாக அவர்களை தங்கவைப்பதும் கூட கடினமாகியுள்ளது. இச் சூழ்நிலையானது எப்போதும் NBRO சுயநிதியிடல் நிறுவனமாக இருந்த போதிலும் தற்போதுள்ள பணியாளர்களுக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள் எதுவும் இல்லாததினால் மேலும் தீவிரமாக்கப்பட்டது.

**பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தாண்டுதல்**

- தேசிய தேவைகளை அதிலும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினது ஈடுசெய்வதற்காக தற்போதைய செயற்பாடுகளை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி எனும் கோதாவில் மேற்கொள்வதற்கு சட்டமூலம் ஒன்றின் மூலம் சட்ட அதிகாரத்தைப் பெறுதல்.

- உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகமைகள் மற்றும் உயர் தரத்திலான புலமையான பெறுபேறுகள், தர நிச்சயப்படுத்துகை மற்றும் பணியாளரின் புலமைத்துவ நிலைகள் போன்றவற்றை நிச்சயப்படுத்தும் முகாமைத்துவ முறைமைகள் போன்றவற்றிலான இடைவெளிகளை நிரப்பபுவதற்கு திட்டமொன்றை உருவாக்குதல்.

- கொடையாளரினால் நிதியிடப்படும் மானியங்கள் மற்றும் செயற்திட்டங்களை ஈர்த்தல். இதனூடாக நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் உசாத்துணை ஆற்றல்களை வலுப்படுத்த முடியும்.

- NSF மற்றும் NRCயினால் தொடர்சீராக தரப்படும் ஆராய்ச்சி மானியங்களை பெறுவதற்கு விஞ்ஞானிகளை ஊக்குவித்தல், தேசிய மானிய திட்டங்களினால் தரப்படும் வசதிகளை முழுமையாகப் பயன்படுத்துதல் மற்றும் தேசிய ஆராய்ச்சி விருதுகளில் பங்கேற்றல்.

- முறைமையாக தாபிக்கப்பட்ட முறைமையினூடாக நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அங்கீகாரம் தருதல் மற்றும் விஞ்ஞானியின் எதிர்கால செயற்பாட்டின் பூரணத்துவமாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஏற்படுத்துதல்.

- முழு நேர பட்டமேல் ஆராய்ச்சி தகமை மற்றும் அனுபவத்தைப் பெறுவதற்கு விஞ்ஞானிகளை விடுவிப்பற்கு பொறிமுறையொன்றை உருவாக்குதல்.

- ஏற்கனவேயுள்ள பயிற்சி மற்றும் தொடர் அபிவிருத்தி வசதிகளை வலுப்படுத்துதல்.

- தொடர் அபிவிருத்தி, விசேட ஊக்குவிப்புகள் மற்றும் உயர்திறனான தொழிநுட்ப வேலைகள்-உசாத்துணைகள் மற்றும் ஆராய்ச்சி வேலைகளுக்கான வெகுமதிகள் போன்றவற்றிற்காக செயற்பெறுபேறு அடிப்படையிலான மதிப்பீட்டின் அறிமுகப்படுத்துகை போன்ற பொருத்தமான வரையமைப்பொன்றினால் உயர்திறனான புலமைத்துவ வேலைகளை அங்கீகரித்தல்.

**எதிர்காலத் திட்டங்கள்**

வரும் வருடத்திற்காக NBROவின் கூட்டுறவுத் திட்டத்தின் எதிர்வுகூறலானது எதிர்பார்க்கப்படும் அசாங்க மானியம் 146 மில்லியன் என காட்டுகிறது. இது மொத்த பாதீடு 245 மில்லியனின் கிட்டத்தட்ட 60% ஆகும். இப்பெறுமானங்கள், கரண்டியல்ல மண்சரிவு ஸ்திரப்படுத்துகையின் வேகமான நடைமுறைப்படுத்துகை காரணமாக பாரியளவினால் இடமாற்றப்படலாம். இதை அரசாங்கம் முன்னுரிமைச் செயற்திட்டமாக கருதுவதுடன் நிதியைத் தருகிறது. இதற்கு மேலதிகமாக ஆபத்தானதாக அடையாளங் காணப்பட்டுள்ள ஏனைய 47 தலங்களின் ஸ்திரப்படுத்துகைக்காக தற்போது நிதி நாடப்படுகிறது. அத்துடன் நடைமுறைப்படுத்தல் வேலைகள் NBROவின் நாளாந்த வேலைகளுக்கும் அப்பாற்பட்ட நடவடிக்கைகளினுள் நகர்வதனால் NBROவிற்கு மேலும் அழுத்தத்தைக் கொடுக்கும். அத்தலங்களின் ஆபத்தான இயல்புகளின் மதிப்பீடு மற்றும் பாதிப்பு ஏதுநிலைகளுக்கேற்ப அத்தலங்களின் முன்னுரிமை நிலைகள் அண்மைணில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது கண்டி,மாத்தளை, பதுளை, மற்றும் நுவரெலியா ஆகிய நான்கு மாவட்டங்கள், அந்த வேலையின் கட்டம் 1 ஆக ஸ்திரப்படுத்துதல் வேலைக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஏனைய மாவட்டங்களிலுள்ள மண்சரிவுகள் கட்டம் 2 மற்றும் கட்டம் 3இல் தொடர்ந்து ஸ்திரப்படுத்தப்படும்.

ஆகவே, அத்தகைய செயற்திட்டங்களின் வேகமான நடைமுறைப்படுத்தலில் கவனஞ் செலுத்தி வலுவான செயற்திட்ட முகாமைத்துவம்/அமுலாக்கல் அலகொன்றை தாபிப்பது அந்த பெரிய கொத்தணியான செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு NBROவிற்கு அவசியமாகிறது. இத்தகைய செயற்திட்டங்களின் அமுலாக்கத்தைச் செய்வதற்கு பல்துறை அணுகுமுறையொன்றும் கூட அவசியமாகும்.

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் அவர்களது அண்மைய செயற்திட்ட பிரேரணைகளான இலங்கை 2010-2030 இல் முக்கியத்துவமான வகிபாகத்தை NBRO மேற்கொள்ளும் பல எதிர்கால செயற்

திட்டங்களை அடையாளப்படுத்துகின்றது. இத் திட்டத்திலுள்ள முக்கியத்துவமான எடுகோள்களாக இயற்கை அனர்த்தங்களிலிருந்து அப்பால் மானிட குடியிருப்புக்களின் உருவாக்கம் மற்றும் பிராயச்சித்தம் மற்றும் அனர்த்த தணிப்பு நடவடிக்கை ஒன்றாக அச்சுறுத்தலில் உள்ள நிலத்தில் மீளக் காடுவளர்ப்பு என்பன உள்ளன.

இது தொடர்பில் கவனமான மீள்தேடலின் பின்னர் மற்றும் பங்கீடுபாடுடையோருடன் நன்கு ஆலோசித்து காத்திரமான செயற்திட்டப் பிரேரணைகளை முன்வைக்க வேண்டும். நிலப்பாவனையில் மாற்றங்களை நாடும் அத்தகைய பல பகுதிகளை மற்றும் இவ்வேலையில் NPPD இற்கு தொடர்ந்து உதவுவதற்காக NBROஇற்குள்ள தேசிய முக்கியத்துவத்தை NBRO ஏற்கனவே இனங்கண்டுள்ளது. இதில் கணிசமானளவு நீண்ட கால (5-10வருடம்) செயற்திட்டங்களை NBRO பிரேரிக்க முடியும். அத்துடன் NPPD இன் திட்டங்களின் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்களுக்கான ஒத்துழைப்பு நிறுவனமொன்றாக வகிபாகத்தை NBRO கொண்டிருக்கும். ஸ்திரமற்ற பகுதிகளின் அடையாளங் காணல்களுக்காக ஒத்துழைப்பு பாத்திரத்தை NBRO ஏற்கனவே செய்துள்ளதினால் மற்றும் கட்டுப்படுத்துகைக்கான நிரூபிக்கப்பட்ட ஆற்றலை NBRO கொண்டுள்ளதனால் NBRO பிரேரிக்கக்கூடிய முக்கியமான செயற்திட்டங்களுக்கு அரசாங்கம் மற்றும் ஏனைய முகவர்கள் நிதிவழங்குவதற்கு NBRO எதிர்பார்க்க முடியும்.

கரையோரத்திலிருந்து 3கி.மீ.இற்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் எதிர்கால நகரங்களை தாபிப்பதற்கான அனர்த்தத்திற்கு தாக்குபிடிக்கும் பொருத்தமான தலங்களின் தெரிவு மற்றும் தலைநாட்டில் உணர்திறனுள்ள பகுதிகளில் மீள்காடுவளர்ப்பு என்பனவற்றில் தேசிய தேவையொன்றாக NBROவின் பங்களிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உண்மையில் NPPDயினால் அவர்களது திட்டமிடல் செயல்முறைகளில் பாவிக்கப்படும் பல முக்கியமான அளவுகோல்களின் உருவாக்கத்திற்கு NBRO பங்களித்திருக்கின்றது. அத்துடன் இது NPPDயின் தேசிய திட்டங்களை வெற்றிகரமாகவும் பயன்விளைவாகவும் துரிதப்படுத்துவதற்கு NBROவின் பங்களிப்பை அவசியமாக்குகிறது.

இலங்கையிலுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுடன் கூட்டாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப கொள்கையின் அமுலாக்கத்திற்கான முழுமையான நிறுவக நடவடிக்கைத் திட்டமானது NBROவிற்காக பல்வேறு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை இனங்கண்டுள்ளது. இச்செயற்திட்டங்களிலுள்ள ஆராய்ச்சி விடயபரப்புக்கள் நிர்மாணம், கட்டிடத்திரவியங்கள், புவித்தொழிநுட்பவியல், குடியமர்வுத் திட்டமிடல் அபாய முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் தொழிநுட்பக் களங்களினுள் வருகின்றது. NBRO வானது குறிப்பிட்ட வேலைக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனமாக இனங்காணப்பட்டுள்ள போதிலும் அரசாங்கம் மற்றும் ஏனைய ஆராய்ச்சி நிதிவழங்கும் நிறுவனங்களிலிருந்து நிதி பெறுவதற்காக ஆராய்ச்சி செயற்திட்டங்களை உருவமைத்தல் மற்றும் நல்ல செயற்திட்டப் பிரேரணைகளை செய்வதற்கும் இன்னமும் அவசியம் உள்ளது.

மாவட்ட அலுவலகங்களின் ஆற்றலை விருத்தி செய்வதன் மூலம் தற்போது கொழும்பு அலுவலகத்தில் செய்யப்படும் பரிசோதனை மற்றும் உசாத்துணை வேலைகளை பிராந்திய மட்டத்தில் பரவலாக்குவதற்கு NBRO கருதியுள்ளது.

### மதிப்புயர்வு

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ. மகிந்த அமரவீர, அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் கௌரவ. டுலிப் விஜேசேகர, அனர்த்த முகாமைத்துவ செயலாளர் மற்றும்

NBROவை இந்த வெற்றிக்கு இட்டு வந்த தலைமைத்துவம் மற்றும் தொலைநோக்குள்ள இடைக்கால முகாமைத்துவ குழுவின் தலைவர் திருமதி.எஸ்.எம்.முகமட் ஆகியோருக்கு எனது உண்மையான நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கிறேன். IMCயின் அங்கத்தவர்கள் மற்றும் பாதீட்டுத் திணைக்களம், பொது திறைசேரி, தேசிய திட்டமிடல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், வளி மண்டலவியல் திணைக்களம் என்பவற்றின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் ADPCயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளளேன். இதற்கு மேலதிகமாக எம்மீது தொடர்ந்து கொண்டுள்ள நம்பிக்கைக்காக எமது பங்கீடுபாடுடையோருக்கு எனது உண்மையான நன்றிகளை தெரிவிக்கின்றேன்.


அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ.மகிந்த அமரவீர, அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் கௌரவ.டுலிப் விஜேசேகர, அனர்த்த முகாமைத்துவ செயலாளர் மற்றும்


NBROவை இந்த வெற்றிக்கு இட்டு வந்த தலைமைத்துவம் மற்றும் தொலைநோக்குள்ள இடைக்கால முகாமைத்துவ குழுவின் தலைவர் திருமதி.எஸ்.எம்.முகமட் ஆகியோருக்கு எனது உண்மையான நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கிறேன். IMCயின் அங்கத்தவர்கள் மற்றும் பாதீட்டுத் திணைக்களம், பொது திறைசேரி, தேசிய திட்டமிடல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், வளி மண்டலவியல் திணைக்களம் என்பவற்றின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் ADPCயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளளேன். இதற்கு மேலதிகமாக எம்மீது தொடர்ந்து கொண்டுள்ள நம்பிக்கைக்காக எமது பங்கீடுபாடுடையோருக்கு எனது உண்மையான நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

எந்திரி.(கலாநிதி).ஆசிரி கருணாவர்த்தன
பணிப்பாளர் நாயகம்

# தொழிற்பாட்டு ரீதியான வெளிப்படுத்துகைகள் - 2011






தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது(NBRO), வெற்றிகரமான தொழிநுட்பச் சேவை தருனர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக வளர்ந்து வியாபித்துள்ளது. அங்கு பல்வேறு துறைகளிலிருந்தான நிபுணர்கள் குழுமமாயுள்ளதுடன் நாட்டிற்கு பாதுகாப்பாக கட்டியெழுப்பப்பட்ட சூழலொன்றை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளனர். NBROவின் நிபுணத்துவமானது, மண்சரிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட புவியியல் ஆபத்துக்கள், மனிததொழிநுட்பம், சுற்றாடலியல் முகாமைத்துவம் மற்றும் பொறியியல் செயற்திட்ட முகாமைத்துவம் எனும் பரந்த வீச்சிலான துறைகளில் விரிவடைந்துள்ளது.

கடந்து வந்த வருடங்களில் NBROவானது இலங்கையில் ஒரு தகைமையுள்ள ஆராய்ச்சி நிறுவனமாக வருவதற்கு அதன் ஆற்றலை அபிவிருத்தி செய்து கொண்டுள்ளதுடன் தற்போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஆராய்ச்சி அமைப்பாக சேவையாற்றுகிறது. நாட்டில் வாழும் சூழலில் எதிர்நோக்கப்படும் பல்வகுப்பாக்க பிரச்சனைகளை கண்டுகொண்டுள்ளதுடன் மக்களின் வாழ்க்கையின் தரத்தைப் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்கும் தீர்வுகளை அடைவதற்கு முற்பட்டுள்ளது.








இந்த வருடத்தின் போது NBRO அதன் விதந்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் கூட்டிணைப்புத் திட்டத்துடனான அமைய ஒழுங்கில் கீழ்வரும் பிரத்தியேக இலக்குகளை மேற்கொண்டது.

- மண்சரிவு ஆய்வுகள் மற்றும் சேவைகள், புவித்தொழிநுட்பப் பொறியியல், செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள், கட்டிடத் திரவியங்கள், மனித குடியிருப்புக்கள் திட்டமிடுதல் மற்றும் சுற்றாடலியல் முகாமைத்துவம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலை அத்துடன் தொழிநுட்ப உசாத்துணைச் சேவைகளைத் தருதல்.

- மண்சரிவு ஆபத்துக்களின் இடரீதியான பரம்பலை அடையாளங் காண்பதற்காக 1:10,000 மற்றும் 1:50,000 அளவீட்டிலான தேசவரைபடங்களை உருவாக்குவதன் மூலம் மண்சரிவு ஆபத்து வலய தேசவரைபடமாக நிகழ்ச்சித் திட்டத்தின் (LHMP) தொடர்ச்சி. இத்தேச வரைபங்கள் பெறுமதி மதிக்க முடியாத கருவிகளாக தேசிய மற்றும் பிராந்திய திட்டமிடுதல், மண்சரிவு முன்னெச்சரிக்கை வழங்குதல் நிர்மாண விடுவிப்புச் சான்றிதழ்களுக்கான அடிப்படைச் சாதனமாக பயன்படுத்தப்பட்டு வருகிறன.

- சீரற்ற வானிலை நிலமைகளின் போது மண்சரிவு முன்னெச்சரிக்கை வழங்குதலின் கடமை முக்கியத்துவத்துடன் ஒன்றியுள்ளது.

- மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மண்சரிவு விடுவிப்புச் சான்றிதழ் மற்றும் பரிந்துரைகளை வழங்குவது 2011 மார்ச்சிலிருந்து உள்ளூராட்சி சபைகளினால் கட்டிட அனுமதி வழங்குவதற்கு ஓர் முற்தேவையாகியுள்ளது.

- மீள்குடியமர்வு ஒரு பொருளாதார ரீதியற்ற தெரிவாக காணப்படும் நகர மற்றும் பகுதியளவில் நகரமாகவுள்ள பிரதேசங்களில் மண்சரிவுகளை கட்டுப்படுத்துவதில் அண்மைக்காலத்தில் NBRO அடியெடுத்து வைத்துள்ளது. பேராதனை, பதியப்பலல்ல மண்சரிவு கட்டுப்படுத்துகை மற்றும் கரண்டியல்ல மண்சரிவு ஸ்திரப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டம் என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அடுத்துவரும் 5வருடங்களில் மத்திய மாகாணம் மற்றும் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள சுமார் மேலும் 16 மண்சரிவுகளை கட்டுப்படுத்துதலை ஆரம்பிப்பதற்கு திட்டங்கள் ஏற்கனவே செய்யப்பட்டு வருகின்றன.

- மண்சரிவொன்று நிகழும் போது உயிர் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அருகிலுள்ள மனித குடியிருப்புக்கள், உட்கட்டமைப்பு மற்றும் பெருந்தோட்டங்களுடன் சம்பந்தப்பட்டுள்ள அபாயத்தை இனங்காண்பதற்கான கண்டறிவுகளை NBRO












மேற்கொண்டதுடன் உடனடியான பரிந்துரைகளை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு தந்துள்ளது.

- மண்சரிவுகளினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் மீள்குடியமர்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலங்களையும்கூட NBRO ஆய்வு செய்கிறது. இந் நடவடிக்கைகள் ஓர் தேசிய சேவைகளாக மேற்கொள்ளப்பட்டன.

- நில துளையிடல் ஆய்வுகள் மற்றும் நன்கு உபகரணமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தில் புவித் திரவியங்களின் பரிசோதனை அடங்கலாக புவித்தொழிநுட்பவியல் கண்டறிவுகளை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்டதோர் அமைப்பாக அதன் தகமையை NBRO தாபித்துக் கொண்டுள்ளது. அதேயிடத்தில் உருவான மண், விரிவடையும் தன்மையுள்ள மண், சேதன உக்கல்மண் போன்றவற்றின் இயல்புகளை விளங்கிக் கொள்வதிலான ஆராய்ச்சி மற்றும் கரிசனைக்குத் தரப்பட்டுள்ள பிரச்சினைகளுக்குரிய மண்வகைகளில் பொருத்தமான நிர்மாணத் தொழிநுட்பங்களை கண்டறிதல் என்பன செய்யப்படுகின்றன.

- கட்டிடம் மற்றும் நிர்மாணத்திரவியங்களில் பரிசோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டுச் சேவைகளைத் தருதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்துகையில் தொழிற்துறைக்கு உதவுதல், நிறுவனத்தின் நிதியியல் தகமையை தொடர்ந்து வலுப்படுத்துதல்.

- நீர் மற்றும் கழிவுநீர் பரிசோதனை மற்றும் வளியின் தரம், வெளிவிடுகைகள், இரைச்சல் மட்டங்கள் மற்றும் அதிர்வு போன்றவற்றிலான உசாத்துணைச் சேவைகளை கையேற்கப்பட்ட பல்வேறு செயற்திட்டங்களிலான சுற்றாடலியல் ஆய்வுகளுக்காக தருதல்.

- ஏற்கனவேயுள்ள கட்டிடங்களில் நிலமை மதிப்பீடு மற்றும் சேதங்களின் மதிப்பாய்வு மற்றும் சேதங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் கட்டமைப்பு ஸ்திரத்தன்மைகளுக்கான சிபாரிசுகள் அடங்கலான நிலமை அறிக்கைகளின் தயாரிப்பு உள்ளடங்கிய செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளும் கூட 2011ஆம் வருடத்தின் போது கையேற்கப்பட்டன.

# நிதியியல்வெளிப்படுத்துகைகள்

## வருமானம்

மீள்பார்வையிலுள்ள வருடத்திற்கு ரூபா 122மில்லியன் உறுதிப்படுத்தப்பட்ட வருமானத்தை NBRO பதிவு செய்தது. இது கடந்த வருடங்களை விட 43% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது.

2011இல் கிட்டத்தட்ட 108மில்லியன் ரூபா குறிப்பிடத்தக்க வளர்ச்சியை NBROவின் வாடிக்கையாளர் சேவைகளின் பாதீடு காட்டுகிறது. இங்கு மண்சரிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கான அரசாங்க மானியம் 73மில்லியன் ரூபாய்களுக்கு உயர்த்தப்பட்டிருந்தது.


வருமான வளர்ச்சியானது, நாட்டில் ஆபத்தான மண்சரிவுகளை ஸ்திரப்படுத்துகைக்காக NBROவினால் செய்யப்படும் கட்டுப்படுத்துகை செயற்திட்டங்களினுள் அடியெடுத்து வைத்ததின் மூலமாக எய்தப்பட்டது. இது, NBROவின் எதிர்காலத்தை நெறிப்படுத்தும் மற்றும் திசைமுகப்படுத்தும் தீர்மானகரமான படியொன்றாக கருதப்படுகிறது.

இது, NBROவிற்கு ஓர் மேலதிக வேலைச்சுமையை உருவாக்கியுள்ளது. இச் செயற்திட்டங்கள் பாரிய செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காக NBROவின் ஆற்றலை ஊக்கப்படுத்தி ஆளணி தெரிவு, உபகரணக் கொள்வனவு மற்றும் விரிவாக்கப்பட்ட பாதீடுகளை வேண்டிநிற்கின்றது.


வரும் வருடத்திற்கான NBROவின் கூட்டிறவுத் திட்டத்தின் எதிர்வுகூறலானது, அரசாங்க மானியத்தை 146மில்லியன் ரூபாய்களாக எதிர்பார்க்கப்பட்டுள்ளதை காட்டுகிறது. இது மொத்த பாதீடான 245மில்லியனின் கிட்டத்தட்ட 60% ஆகும்.

அபாயக்குறைப்பு செயல்வழிமுறை ஒன்றாக மண்சரிவு ஏற்படக்கூடிய 10 மாவட்டங்களுக்கு கட்டிட நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான விடுவிப்புக்களை வழங்குவதற்கு NBRO, அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றினால் பாரதீனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய 2011 மார்ச்சிலிருந்து 10 மாவட்ட அலுவலகங்கள் இயங்குவதுடன் இற்றைவரையில் NBROவினால் 3மில்லியன் ரூபா மாதாந்த செலவீனம் உள்வாங்கப்பட்டுள்ளது. 2011ஆம் வருடத்தில் மட்டும் உள்வாங்கப்பட்ட அந்த செலவீனங்களை ஈடுசெய்வதற்காக திறைசேரியிலிருந்து 30மில்லியன் ரூபாஎதிர்பார்க்கப்படுகிறது. மொத்தச் செலவீனமான 30 மில்லியன் ரூபாயில்


**பரிசோதனை மற்றும் உசாத்துணையால் வருமானம்**





**மண்சரிவு கட்டுப்படுத்துகை பாதீடு**




**ஆராய்ச்சி மானியம் மற்றும் கொள்வனவு**




**மொத்த வருமானம்**



10.6மில்லியன் ரூபா சிறிய ஓர் கட்டணத்தில் விடுவிப்புச் சான்றிதழ்கள் வழங்கியதன் மூலம் உரிய உள்ளுராட்சிசபைகள் மற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து பெறப்பட்டது.

பேராதனை மற்றும் பதியபலல்ல மண்சரிவுகளின் கட்டுப்படுத்துகைகளுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக திறைசேரியினால் நிதியிடப்பட்ட 52மில்லியன் ரூபா அடங்கலாக 2011ஆம் ஆண்டிற்கான மொத்த பாதீட்டுச் செலவீனம் ரூபா 182.25மில்லியன். 31 டிசம்பர் 2011இல் உள்ளவாறாக 16 மில்லியன் ரூபாய் மட்டுமே DMCயினூடாக பெறப்பட்டுள்ளதுடன் மீதிச் செலவீனமானது உள்ளக வருமான உருவாக்கத்தினால் ஈடுசெய்யப்பட்டது.

இதற்கும் மேலதிகமாக ஆராய்ச்சிக்கு (மண்சரிவு ஆபத்து தேசவரைபடமாக்கம்) 21.5மில்லியன் ரூபா மற்றும் ஆய்வுகூட மற்றும் கள உபகரணங்களுக்கு 21.5 மில்லியன் ரூபா அரசாங்க மானியம் 2011ஆம் ஆண்டிற்காக பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதில் முறையே 17.5 மில்லியன் ரூபா மற்றும் 17.0 மில்லியன் ரூபா மானியங்களாகக் கிடைக்கப்பெற்றன. இதற்கும் மேலதிகமாக மண்சரிவு விசேட கண்டறிவுகள் மற்றும் DRR பரிந்துரைகளுக்கான செலவீனங்களை ஈடுசெய்வதற்கு DMCயினூடாக திறைசேரியினால் 10 மில்லியன் ரூபா மானியம் தரப்பட்டது. இதுவரை 6.5 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 3.5 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டிற்கான மொத்த இயங்கு வருமானம் 181.8 மில்லியன் ரூபாவாக இருக்கையில் அதே காலப்பகுதிக்கான மொத்த இயங்கு செலவீனம் 162.5 மில்லியன் ரூபாவாக இருந்தது. பணியாள் வலு 236இற்கும் மற்றும் நாளாந்த ஊதிய பணியாளர்களுக்கான தனிநபர் செலவீனமாக இருந்தது. இது 2010ஆம் வருடத்தில் பணியாள் வலு 203 மற்றும் நாளாந்த ஊதிய பணியாளர்களுக்குமான 75.2 மில்லியன் ரூபாய்களாக இருந்தது.

# நிதியியல் நிலமையின் அறிக்கை

| *31 டிசம்பர் 2011இல் முடிவுறும் வருடத்திற்கானது* | 2011<br>ரூபா. | 2011<br>ரூபா. | 2010<br>ரூபா. | 2010<br>ரூபா. |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறை அற்ற சொத்துக்கள்** | | | | |
| சொத்து, கருவி மற்றும் உபகரணம் | 79,924,846.06 | | 82,361,235.65 | |
| நானாவித கடன்பட்டோர் (1991 - 200 | 5,266,577.03 | | 6,065,479.97 | |
| | | 85,191,423.09 | | 88,426,715.62 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பதிவேடு | 705,366.59 | | 295,206.44 | |
| மீளளிக்கப்படும் கொடுப்பனவு | 289,898.42 | | 244,898.42 | |
| நடைபெறும் வேலை | 1,561,109.39 | | 5,519,008.04 | |
| நானாவித கடன்பட்டோர் (2009 - 2011) | 16,281,604.84 | | 20,402,336.50 | |
| நானாவித பெறப்படுவன.ஃமானியம், செயற்திட்டம் | 49,911,229.02 | | 200,000.00 | |
| வைப்புக்கள் | 4,416,731.57 | | 3,220,579.30 | |
| முற்பணம் | 4,476,121.33 | | 10,596,474.04 | |
| முற்கொடுப்பனவு | 335,158.95 | | 135,390.00 | |
| காசு மற்றும் காசுக்குச் சமமான | 9,835,650.71 | | 42,593,764.59 | |
| | | 87,812,870.82 | | 83,207,657.33 |
| **மொத்த சொத்து** | | **173,004,293.91** | | **171,634,372.95** |
| **பொறுப்பக்கள்** | | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | |
| நானாவித கடன் கொடுத்தோர் | 2,084,027.59 | | 18,053,645.35 | |
| கொள்வனவுச் செலவுகள் | 6,701,041.95 | | 4,418,769.30 | |
| மீளளிக்கப்படும் வைப்புக்கள் | 2,262,276.95 | | 872,370.00 | |
| | | 11,047,346.49 | | 23,344,784.65 |
| **நடைமுறை அற்ற பொறுப்புக்கள்** | | | | |
| நலன்புரி நிதி | 374,261.10 | | 374,261.10 | |
| புணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 32,147,490.50 | | 29,030,157.50 | |
| | | 32,521,751.60 | | 29,404,418.60 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **43,569,098.09** | | **52,749,203.25** |
| **மொத்த தேறிய சொத்து** | | **129,435,195.82** | | **118,885,169.70** |
| **தேறிய சொத்து / உரிமைத்துவம்** | | | | |
| சொத்து கொள்வனவு | 2,264,497.95 | | 2,264,497.95 | |
| மீள் மதிப்பீட்டு மேலதிகம் | 27,875,989.31 | | 27,875,989.31 | |
| அரச மானியம் | 125,985,944.54 | | 116,047,416.23 | |
| ஏனைய மானியம் | 42,496,995.95 | | 57,292,202.09 | |
| சேர்ந்த இலாபம்-(நட்டம்) | (69,188,231.93) | | (84,594,935.88) | |
| | | 129,435,195.82 | | 118,885,169.70 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்- உரிமைத்துவம்** | | **129,435,195.82** | | **118,885,169.70** |

# நிதியியல் பெறுபேற்று அறிக்கை

| *31 டிசம்பர் 2011இல் முடிவுறும் வருடத்திற்கானது* | **2011** | **2010** |
|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** |
| **இயங்கு வருமானம் *** | | |
| வருமானம் | 159,752,138.01 | 105,068,663.91 |
| ஏயை அயங்கு வருமானம் | 582,135.81 | 724,726.94 |
| ஆராய்ச்சி மானியம் | 21,500,000.00 | 21,250,000.00 |
| | 181,834,273.82 | 127,043,390.85 |
| **இயங்கு செலவு *** | | |
| தனிநபர் ஊதியம் | 94,431,614.60 | 75,271,903.22 |
| பயணம் மற்றும் படி | 4,861,107.59 | 3,447,805.25 |
| வழங்கல்களும் பாவிக்கப்படக்கூடியனவும் | 10,910,859.36 | 5,865,911.81 |
| திருத்தங்களும் பராமரிப்பும் | 3,752,146.76 | 3,430,241.87 |
| ஒப்பந்தச் சேவைகள் | 34,669,079.72 | 24,605,763.30 |
| ஏனைய இயங்கு செலவுகள் | 13,907,760.39 | 9,291,672.08 |
| **மொத்த இயங்கு செலவுகள்** | 162,532,568.42 | 121,913,297.53 |
| **இயங்கு நடவடிக்கைகளினால் மேலதிகம்/(பற்றாக்குறை)** | 19,301,705.40 | 5,130,093.32 |
| கணக்கில் வராதவை | 25,000.00 | |
| | 19,326,705.40 | |
| நிதிச் செலவு | (17,853.23) | (10,225.00) |
| இயங்கு செலவு அல்லாத செலவுகள் | (3,902,148.22) | (4,009,764.30) |
| மொத்த இயங்கு வருமானம் அல்லாத வருமானம் | (3,920,001.45) | (4,019,989.30) |
| **காலப்பகுதிக்குரிய தேறிய மேலதிகம்/(பற்றாக்குறை)** | **15,406,703.95** | **1,110,104.02** |

# காசுப் பாய்ச்சல் அறிக்கை

| *31 டிசம்பர் 2011இல் முடிவுறும் வருடத்திற்கானது* | ரூபா. | ரூபா. | ரூபா. |
|---|---|---|---|
| **இயங்கு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| **வருடத்திற்கான மேலதிகம்/(பற்றாக்குறை)** | **15,406,704.00** | | |
| ஆராய்ச்சி மானியம் | (21,500,000.00) | | |
| முன்னய வருட சீராக்கம் | 458,109.00 | | |
| | (5,635,187.00) | | |
| **நிதி நகர்வில் ஈடுபடாத விடயங்களுக்கான சீராக்கம்** | | | |
| தேய்மானம் | 5,508,892.00 | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 3,412,498.00 | | |
| பணிக்கொடை கொடுப்பனவு | (295,165.00) | | |
| முன்னய வருட சீராக்கம் | (458,109.00) | | |
| **நடைமுறை மூலதனத்தின் விடயங்களில் மாற்றங்களுக்கு முந்திய நடைமுறை இலாபம்** | **2,532,929.00** | 2,532,929.00 | |
| **நடைமுறை மூலதனத்தின் விடயங்களில் மாற்றம்** | | | |
| கடன்கொடுத்தோரில் குறைவு (1991-2008) | 798,902.00 | | |
| பதிவெடுகளில் அதிகரிப்பு | (410,160.00) | | |
| மீளளிக்கப்படும் கொடுப்பனவுகளில் அதிகரிப்பு | (45,000.00) | | |
| நடைபெறும் வேலையில் குறைவு | 3,957,899.00 | | |
| கடன்கொடுத்தோரில் குறைவு (2009-2011) | 4,120,732.00 | | |
| நானாவித கிடைப்பனவுகளில் அதிகரிப்பு- மானியம், செயற்திட்டம் | (49,711,229.00) | | |
| வைப்புக்களில் அதிகரிப்பு | (1,196,152.00) | | |
| முற்பணங்களில் குறைவு | 6,120,353.00 | | |
| முற்கொடுபடபனவுகளில் அதிகரிப்பு | (199,768.00) | | |
| நானாவித கடன்பட்டோரில் குறைவு | (15,969,618.00) | | |
| கொள்வனவு செலவீனங்களில் அதிகரிப்பு | 2,282,272.00 | | |
| மீளளிக்கப்படும் வைப்புக்களில் அதிகரிப்பு | 1,389,906.00 | (48,861,863.00) | |
| **இயங்கு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | | | **(46,328,934.00)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| நிரந்தர சொத்துக்கள் கொள்வனவு | | (31,079,180.00) | **(31,079,180.00)** |
| **நிதியியல் நடவடிக்கைகளினால் காசுப் பாய்ச்சல்** | | | |
| அரச மானியம் (ஆராய்ச்சி மற்றும் கொள்வனவு) | | 44,650,000.00 | **44,650,000.00** |
| | | | **(32,758,114.00)** |
| **காலப்பகுதியின் ஆரம்பத்தில், காசும் காசுக்குச் சமனானவையும்** | | | **42,593,764.00** |
| **காசும் காசுக்குச் சமனானவையும் 31.12 2011இல் உள்ளவாறு** | | | **9,835,650.00** |

## கணக்குகளுக்கான குறிப்புகள்

**1) அடிப்படை கணக்கியல் அனுமானங்கள்.**

அ) நடைபெறும் கரிசனைபு.
ஆ) கணக்கியல் கொள்கைகளின் ஏகவினமான பிரயோகம்..
இ) வரவு செலவுகள் திரட்டப்பட்டு அவற்றுக்குரிய வருடத்தில் பதியப்பட்டன.

**2) பொது கணக்கியல் கொள்கைகள்:**

அ) தேய்மானப் பெறுமதி 2009இலிருந்து ஒவ்வொரு வருடமும் கொள்வனவு வருடத்தின் செப்டெம்பர் 30 வரை தரப்படுகிறது. அதன்பின்னர் அரச கணக்காய்வாளரின் அறிவுறுத்தலின்படி அடுத்த வருடத்திற்கு அறவிடப்பட வேண்டும்.

கள உபகரணம், வாகனங்கள், தளபாடம்-பொருத்துகளின் மீள் மதிப்பீட்டில் அவ்வருடத்திற்கான தேய்மானம் அவ் வருட இலாப நட்ட கணக்கில் காட்டப்படும்.

ஆ) சொத்துக்களின் தேய்மானம், நேர் கோட்டு முறையிலேயே அமையும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 2.5% |
| இயந்திர ஆய்வு கூட உபகரணங்கள் | 20% |
| தளபாடம் பொருத்துகள் | 10% |
| வாகனங்கள் | 20% |
| பொதுவான அலுவலக உபகரணம் | 20% |
| வரைகல் அறை உபகரணம் | 10% |
| பொறி உபகரணம் | 50% |
| நூலகப் புத்தகங்கள் | 5% |
| தீயனைப்புக் கருவி | 10% |

இ) சொத்துக்களின் தேய்மானப் பெறுமதி இலங்கை கணக்கியல் நியமம் 24 இன் பந்தி 24 இற்கமைய மானியங்களிலிருந்து கழிக்கப்படகின்றது.

ஈ) பொருட்கள் முதலில் வந்தவை முதலில் வெளியேறும் அடிப்படையிலும், முடிவுத் தொக்குக்கு கடைசிக் கொள்வனவின் பெறுமதி தரப்பட்டது.

**3. கடன்பட்டோர்**

1987இலிருந்து கடன்களைச் சேகரிப்பதற்காக சாத்தியமான ஒவ்வொன்றும் செய்யப்பட்டது. புதிவுகள் இல்லாமை காரணமாக, புத்தகங்களில் காணப்பட்ட 1987இலிருந்து 2002 வரையான கடன்பட்டோர் NBROவின் இடைக்கால முகாமைத்துவக் குழு (IMC) மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரங்களுடன் பின்வருமாறு எழுதப்பட்டதுடன் தேசிய பாதீடுகள் திணைக்களத்தின் அங்கீகாரம் தரப்பட்டது.

| | |
|---|---|
| IMC பத்திர இல. 04-10-2009 | 24,494.41 |
| IMC பத்திர இல. 01-2010 | 133,049.21 |
| FR 113-3 இன் கீழ் பாதீட்டுத் திணைக்களம் | 1,731,555.87 |
| IMC பத்திர இல. 01-01-2011 | 29,672.20 |

**4. இணைப்பு 20அ வில் தரப்பட்டள்ள அறவிடமுடியாக் கடன்களுக்குளுக்காக தரப்படும் அடிப்படை**

### 5. பணிக்கொடைக்கான ஒதுக்கீடு

பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டின் கணிப்பு, பணிக்கொடை சட்டத்தின்படியான அடிப்படையிலானது.

### 6. கணக்குகளில் ஒன்றுக்குமேற்பட்டவை

மீளளிக்கப்படும் வைப்பு: FR 570 மற்றும் 571 இற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

### 7. மண்சரிவு கட்டுப்படுத்தகைச் செயற் திட்டம்

நீண்டகால (2009 – 2012)மண்சரிவு கட்டுப்படத்தகைச் செயற் திட்டமான நுவரெலியா, கண்டி, மாத்தளை மற்றும் பதுளையில் அதி அபாயமுள்ள மண்சரிவு மற்றும் பாறை விழுகைத் தலங்களில் சாய்வின் கட்டுப்படுத்துகை மற்றும் ஸ்திரப்படுத்துகையானது, அனர்த்த முகாமைத்துவ நியைத்தின் நிதியிடலுடன் 2009 இல் ஆரம்பிக்கப்பட்டது. செயற் திட்டதடதின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 160.93 மில்லியன் எனினும் நிதி, 2009 ஆம் வருடத்தில் ரூபா 36.0 மில்லியன் மற்றும் 2011 ஆம் வருடத்தில் ரூபா. 35.00 மில்லியன் என எதிர்பர்க்கப்பட்டது போனறு பெறப்படவில்லை. ஆதன்படி செயற் திட்டம் மீள் அட்’டவணைப்படுத்தப்பட்டதுடன் 2012 இறுதிவரை தொடரும்.

மொத்த இயங்கு செலவானது, திறைசேரியினால் நிதியிடப்பட்ட மண்சரிவு அபாய தேசவரைபடமாக்கல் செயற் திட்டம் ரூபா. 21.50 மில்லியன் மற்றும் 2001இல் கட்டுப்படுத்துகைச் செயற் திட்டத்திற்காகப் பெறப்பட்ட ரூபா. 52.00 மில்லியனையும் உள்ளடக்குகிறது. எவ்வாறாயினும் கட்டுப்படுத்துகைச் செயற்திட்டத்திற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திலிருந்து ரூபா 36.00 மில்லியன், 2011 நவம்பர் மற்றும் டிசம்பரில் தெச வரைபடமாக்கல் செயற் திட்டத்திற்கு ரூபா. 4.0 மில்லியன் மற்றும் உபகரண கொள்வனவுகான ரூபா. 6.5 மில்லியன் என்பன உரிய முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றன.

### 8. கட்டிட அனுமதி செயற்பாடு

NBROவானது தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையினால் (NDMC) மண்சரிவு ஏற்படக்கூடிய மாவட்டங்களில் கட்டிட நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி விடுவிப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு NBRO நியமிக்கப்பட்டது. இச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு 2011 மார்ச்சிலிருந்து பத்து மாவட்ங்களில் அலுவலகங்கள் செயற்படுகின்றன. மாதமொன்றிற்கு செயற்படுவதற்கான மொத்தச் செலவு ரூபா. 3.0 மில்லியன் ஆவதுடன் ஆகவே 2011 மார்ச்சிலிருந்து டிசம்பர் வரையலான காலப்பகுதிக்கு மொத்த செலவீனம் ரூபா. 30.0 மில்லியன் என கணக்கிடப்பட்டது. எனினும், சான்றிதழை ஓர் சிறிய கட்டணத்திற்கு வழங்கியதனூடாக உரிய உள்ளுராட்சிகள் மற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து ரூபா 10.6 மில்லியனை பெற இயலுமாகியது.

# மனிதவள மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

அண்மைய கடந்த காலத்தின் போது NBROவில் பணியாளர்மாறுகை ஓர் இயல்பான விடயமாகவிருந்தது. நிறுவனத்தின் மனிதவள மற்றும் உட்கட்டமைப்பு தேவைகள், தற்போது நிறவனத்தின் தோலில் அதிகரித்துள்ள பொறுப்புக்களின் கரிசனையுடன் தீவிரமான விடயமாகியுள்ளது.


இலங்கையில் மண்சரிவு அபாய முகாமைத்துவத்திற்கான தேசிய குவியப்புள்ளியாக NBRO கருதப்படுகிறது. NBROவின் மண்சரிவு அபாயகுறைப்பு ஆற்றல்களை வலுப்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அனர்த்த அபாயக் குறைப்பு வழிமுறையாக நாட்டின் மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் கட்டிட நிர்மாணம் மற்றும் அபிவிருத்தியை சீராக்கம் செய்வதற்காக மண்சரிவு விடுவிப்புச் சான்றிதழ்கள் தற்போது வழங்கப்படுகின்றன. இது 10 மண்சரிவு ஏற்படக்கூடிய மாவட்டங்களில் அலுவலகங்களை அமைப்பதுடன் தற்போதுள்ள பணியாளர் வலுவை சுமார் 75% இனால் அதிகரிப்பதற்கு அவசியப்படுத்தியுள்ளது.


புதிய ஆட்சேர்ப்பு முறைமை மற்றும் பதவிஉயர்வு என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இவ்வருடம் அங்கீகரிக்கப்பட்டன. அதன்படி நிறுவனத்தின் நவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 274 ஆழ்நிலைகள் காணப்படுகின்றன. பணியாளர் அபிவிருத்தித் திட்டமொன்று நடைபெறவுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிவாய்ப்புக்கள் விஞ்ஞானிகளுக்கு அவர்களது அனுபவம் மற்றும் அறிவை விரிவாக்குவதறகாக கிடைக்கப்பெறும்.

NBROவின் நோக்கும் பணிக்கூற்றும் அமைச்சினது DRR தேவைகளை ஈடுசெய்வதற்காக அதன் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக அமைக்கப்பட்டன. இந்நோக்கில் உயர்தரத்திலான பெறுபேறுகளைத் தருவதற்காக சட்டமொன்றினாலும் பணியாளர் ஆற்றலை விருத்தி செய்வதனாலும் நிறுவனத்தின் பணிக்கூற்றை NBRO சட்டபூர்வமாக்கும் செயற்பாட்டிலுள்ளது. இதற்கு ஆதரவளிப்பதற்காக மேலும் ஆய்வுகூட மற்றும் கள உபகரணங்கள் மற்றும் பிந்திய பகுப்பாய்வு மென்பொருட்களை கொள்வனவு செய்வற்கும் வெளிநாட்டு நன்கொடையாளர்கள் மற்றும் கூட்டுழைப்பை கவர்வதற்கும் நிறுவன ரீதியான ஆற்றல்கள் விரிவாக்கப்பட வேண்டும்.

2011ஆம் வருடத்தின் போது அரசாங்கத்தின் உதவியுடன் உபகரண ஆற்றலை எம்மால் வலுப்படுத்த முடிந்தது. மண்சரிவு மற்றும் புவித்தொழிநுட்பவியல் கண்டறிவுகளுக்காக Resistivity Sounding & Imaging System கொள்வனவு செய்வதற்காக 11மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது. அதேவேளை புவித்தொழிநுட்பவியல் ஆய்வுகூடத்தில் ஆற்றலை விரிவாக்குவதற்காக Triaxial பரிசோதனை உபகரணம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



# ELECTRICAL RESISTIVITY & TOMOGRAPHY –TERRAMETER LS



இலங்கை அரசாங்கத்தின் உதவியுடன் மண்சரிவு மற்றும் புவித்தொழிநுட்பவியல் கண்டறிவுகளுக்கான ஆற்றலை வலுப்படுத்துவதற்கான Resistivity Sounding & Imaging System கருவியை NBRO பெற்றுக்கொண்டது. இந்த உபகரணமானது சுமார் 11மில்லியன் ரூபா பெறுமதியானதாகும்.

## TRI AXIAL SHEAR பரிசோதனை உபகரணம்



# தேசிய நிகள்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுகை

## 1) மொனராகலையில் நடாத்தப்பட்ட “தேசத்தின் மகுடம்” கண்காட்சி

மொனராகலையில் நடாத்தப்பட்ட தேசத்தின் மகுடம் கண்காட்சியில் NBROவின் காட்சிக்கூடம் காட்சிப்படுத்தப்பட்டது. மாதிரியமைப்புகள் மற்றும் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டன. NBROவின் பணியாளர்கள் NBROவின் செயற்பாடுகளை விளக்குவதிலும் பொதுமக்களைப் மண்சரிவுகளையிட்டு அறிவூட்டுவதிலும் ஈடுபட்டனர்.

## ஆட்சேர்ப்புகள்– 2011

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு டி.பி.நிமல் சாந்த | தகமையற்ற தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 2 | திரு பி.வி.பி.ஜயகொடி | விஞ்ஞானி-கூட்டிணைப்பு விவகாரம் (ஒப்பந்தம்) |
| 3 | திரு டபிள்யு.ஈ பிரதீப் புத்திக | தகமையற்ற தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 4 | திரு எஸ்.ஏ.பி.டிபனாண்டோ | தகமையற்ற தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 5 | திரு ரி.ஜி.பி.லியனகம | தகமையற்ற தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 6 | திரு லி.பி.தனுஂக | தகமையற்ற தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 7 | திரு எச்.கே.ஏ.கபில சேனாரட்ண | தகமையற்ற தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 8 | திரு கே.எல்.ரசிக ருவள் குமார | தகமையற்ற தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 9 | திரு ஈ.வி.திலகசிரி | பகுதிதகமை தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 10 | திருமதி.ஜே.மகேரிகா குருசிங்க | நிர்வாக அலுவலர் (ஒப்பந்தம்) |
| 11 | திரு ஜி.ஏ.என்.புஂபகுமார | தகமையற்ற தொழிலாளி (ஒப்பந்தம்) |
| 12 | திரு டபிள்யு. சுமில் ஜயகாந்த | சாரதி(ஒப்பந்தம்)) |
| 13 | திரு ஆர்.எச்.சி.எஸ். ரட்ணசிரி | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 14 | திரு கே.ஆர்.கே. அமரசேன | கணக்காய்வாளர் (ஒப்பந்தம்) |
| 15 | திரு என். நளின் மதுசங்க | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 16 | திருமதி.எல். ஏ.வயனி | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 17 | திரு எம்.டி.வி.உதயங்க | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 18 | திருமதி.எல். ஏ பி. மதுமாலி | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 19 | திரு.எல்.ஜி.டி.நந்தன | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 20 | திருமதி ஆர்.எல்.பி.பி. கீத்திகா | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 21 | திரு டபிள்யு.ஜி.பி.யு.குமார | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 22 | திருமதி ஜி.எஸ்.டபிள்யு.எஸ்.பிசுமாலி | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 23 | திருமதி பி.என்.சாமளி | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 24 | திருமதி பி.ஜி.என்.விக்ரமரத்ன | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 25 | திரு வை.எஸ்.சந்திரரத்ன | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 26 | திருமதி எச்.எம்.என்.கே.ஹீன்கென்டா | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) |
| 27 | திருமதி. ஆர்.எம்.டபிள்யு.ரத்னாயக | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 28 | திரு ஏ.வணசுந்தர | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 29 | திரு ஆர்.டபிள்யு.எம்.டி.ஆர்.வணிகசேகர | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 30 | திருமதி பி.ஜி.ஏ.எம்.மகிந்தானந்த | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 31 | திரு ஈ.ஏ.எஸ்.என்.விமலவர்தன | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 32 | திருமதி யு.எல்.என்.ஜ.லியனகே | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |

| | | |
|---|---|---|
| 33 | திரு ரி.பி.சி.மகே' | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 34 | திருமதி டி.ஏ.எஸ்.யு.தசநாயக | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 35 | திருமதி ஏ.யு.விஜேநாயக | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 36 | திருமதி எம்.பி.கே.ஜயசிங்க | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 37 | திருமதி எச்.எச்.ஹேமசிங்க | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 38 | திருமதி டபிள்யு.என்.சி.அப்சரா | விஞ்ஞானி-பொறியியலாளர் (ஒப்பந்தம்) |

## இளைப்பாறுகை - 2011

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு ஜி.எல்.சந்திரசேன | தொழில்நுட்ப அலுவலர் |

## இராஜினாமா – 2011

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு டபிள்யு.ஏ.என்லக்மாலி குலசேன | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 2 | திரு மெ்.டி.டி.பி.அபயகோன் | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 3 | திரு ஏ.ரி.ஆர்.பெனாண்டோ | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 4 | திரு எம்இஏ.சி.ஜயகித் | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 5 | திரு எஸ்.என்.எம்.வெடிகார | பொறியியலாளர் |
| 6 | திருமதி எம்.எம்.பி.மதுராவல | பொறியியலாளர் |
| 7 | திரு பி.எம்.டி.ஜே. பத்திராஜா | பொறியியலாளர் |
| 8 | திரு எஸ்.வசந்தன் | பொறியியலாளர் |
| 9 | திரு டபிள்யு.டி.ஜே.பொன்சேகா | தொழில்நுட்ப அலுவலர் |
| 10 | திருமதி.கே.எம்.எஸ்.பெனாண்டோ | கட்டிடக்கலைஞர் |
| 11 | திரு.சி.டி.பி.கொலம்பகே | விஞ்ஞானி |
| 12 | திரு ரசங்க அல்விஸ் டயஸ் | ஆய்வுகூட உதவியாளர் |
| 13 | திருமதி சுனிலா ஜயவீர | விஞ்ஞானி |
| 14 | திரு. ஜி.எல்.சந்திரசேன | தொழில்நுட்ப அலுவலர் |
| 15 | திரு டி.என்.எஸ். வுனியாராச்சி | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 16 | திருமதி திலினி பீரிஸ் | விஞ்ஞானி (ஒப்பந்தம்) |
| 17 | திரு காமினி கோதாகொட | தொழில்நுட்ப அலுவலர் |
| 18 | திரு ஜே.ஆர்.பி.புஸ்பகுமார | தகமையற்ற தொழிலாளி |

# வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றுகை – 2011

| இல. | பெயர் | பயிற்சியின் வகை | நாடு | காலம் |
|---|---|---|---|---|
| 1 | ஆர்.எம்.எஸ்.பண்டார | Regional Capacity Enhancement for landslide Impact Mitigation (RECLAM) | பங்களாதேஷ் | 08 -11 மார்ச் 2011 |
| 2 | கே.சி.சுகதபால | Technical Consultation on Toolkit for Disaster Recovery Practitioners | தாய்லாந்து | 5 ஏப்ரல் 2011 |
| 3 | ஏம்.எச்.ஆர்.மதுரங்க | SAARC Training Programme on Landslide Risk Management | நேபாளம் | 02 - 08 மே 2011 |
| 4 | என்.கே.செனவிரத்ன | Training Course on Elements of Seismic Monitoring techniques for Developing Countries | சீனா | 09 – 29 ஜுன் 2011 |
| 5 | திருமதி ஏ.எம்.எஸ். திசாநாயக்க | Water, Engineering and Development Centre (WEDC) 35th International Conference | ஐக்கிய இராச்சியம் | 05 – 08 ஜுலை 2011 |
| 6 | கலாநிதி எச்.ஏ.ஜி.ஜயதிஸ்ஸ | International Conference "Applied Geoinformatics for Society and Environment (AGSE) | கென்யா | 15 - 19 ஓகஸ்ட் 2011 |
| 7 | கே.சி.சுகதபால | Technical Consultation on Toolkit for Disaster Recovery Practitioners | தாய்லாந்து | 02 செப்டெம்பர் 2010 |
| 8 | திருமதி கே.எம் வீரசிங்க | The Second World Landslide Forum | இத்தாலி | 01- 09 ஒக்டோபர் 2011 |
| 9 | ஆர்.எம்.எஸ்.பண்டார | Resource Person for the SAARC Incident Command System (ICS) | நேபாளம் | 22 – 30 செப்டெம்பர் 2011 |
| 10 | எச்.எம்.எல்.இந்திரதிலக | Training Workshop on "Incident Command System" | நேபாளம் | 22 – 30 செப்டெம்பர் 2011 |
| 11 | ஏம்.டி.சி.பெரேரா | Training Resilient Recovery UN ISDR Global Education and training Institute for Disaster Risk Reduction (GETI) and International Recovery Platform (IRP) | கொரியா | 17 - 19 ஒக்டோபர் 2011 |
| 12 | ஆர்.எம்.பி.சோமரத்ன | Counterpart Training Programme under DIMCEP Prlect | ஜப்பான் | 20 ஒக்-05நவ 2011 |
| 13 | திருமதி எம்.ஆர்.என்.சி வீரசிங்க | AUS AID Public Sector Linkage Programme - Capacity Building on Disaster management in SL | அவுஸ்திரேலியா | 02 – 10 நவம்பர் 2011 |
| 14 | ஆர்.எம்.எஸ்.பண்டார திருமதி கே.எம் வீரசிங்க | The fifth Governing Board Meeting of the SAARC Disaster Management Centre | இந்தியா | 16 - 17 நவம்பர் 2011 |
| 15 | ஆர்.எம்.எஸ்.பண்டார | National Initiatives of Promotion of Earth Warning Mechanisms for Landslides Risk Management under RECLAIM Phase III | பங்களாதேஃ | 03 – 07 டிசம்பர் 2011 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | ஆசிரி கருணாவர்த்தன | Disaster Risk Reduction in Asia, Identifying and minimizing opportunities for Action | தாய்லாந்து | 12 – 14 நவம்பர் 2011 |
| 17 | எச்.ஏ.ஜி.ஜயதிஸ்ஸ சுனில் ஜயவீர | Training of Trainers "Ecosystem based Disaster Risk Reduction for Sustainable Development" | தாய்லாந்து | 06 – 08 டிசம்பர் 2011 |

## உள்ளூர்ப் பயிற்சிகளில் பங்குபற்றுகை - 2011

| இல. | பெயர் | பயிற்சியின் வகை | நிறுவனம் | காலம் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.எம்.எம்.ஜி. மதுராவல | ISO/SEC 17025 - 2005 Internal Auditing & Laboratory Management System | SLAB | 20.01.2001 - 21.01.2011 |
| 2 | ஆர்.பாலசூரிய | National Symposium on Disaster: reduction Mitigation and Management | SLGS | 25.02.2011 - 26.02.2001 |
| 3 | ஏல்.ஏ.ஈ.எல. பெரேரா | Development of Quality Manual and Operating Procedures based on ISO/IEC 170205:2005 | SLAB | 23.02.2011 - 24.02.2011 |
| 4 | தீருமதி கே.எம்.எஸ். பெனாண்டோ | National Conference on Architecture Annual Sessions | SLIA | 24.02.2011 - 27.02.2011 |
| 5 | தீருமதி ஜே.கே ஜயவர்தன | Workshop on Effective Proposal Writing | NSF | 25.02.2011 |
| | தீருமதி எஸ்.வி.டயஸ் | | | |
| | திருமதி ஏ.எம்.எஸ். திசாநாயக்க | | | |
| | தீருமதி ஆர் சவித்தா | | | |
| | தீருமதி வி.நந்தினி | | | |
| | ஏம்.எச்.ஆர்.மதுரங்க | | | |
| | தீருமதி பி.ஏ.பஸநாயக்க | | | |
| | பி.எஸ்.எஸ்.ஏ.விக்ரமசிங்க | | | |
| 6 | ஏம்.டி.சி.பெரேரா | World Meteorological Day | வளிடண்டலவியல் திணைக்களம் | 23.03.2011 |
| 7 | ஏச்.ஜி.எஸ்.ஆரியரட்ண | Human Resources Development through Disciplinary Management | CSDM | 11.03.2011 - 12.03.2011 |
| 8 | எம்.ஆர்.என்.சி வீரசிங்க | Disaster Management Training Programme | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | |
| 9 | ஆர்.எம்.எஸ்.பண்டார ஆர்.எம்.பி.சோமரத்ன டி.எல்.ரி.பீரிஸ் | Annual General Meeting and Technical Sessions | GSSL | 25.02.2011 |
| 10 | திருமதி ஜே.கே ஜயவர்தன திருமதி ஆர் சவித்தா | Disaster resistant Building for SL | மொரட்டுவப் பல்கலைக்கழகம் | 05.05.2011 - 08.05.2011 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | திருமதி ஆர் துடுகல<br>திருமதி நடீக்கா | New Developments in TAX LAWS | Skills Development Fund Ltd. | |
| 12 | திருமதி ஜே.எம்.குருசிங்க | Workshop on SOR and Promotion Schemes | ICTAD | 18.06.2011 |
| 13 | திருமதி ஆர் துடுகல<br>கே.அமரசேன | How to minimise audit quarries in Govt. organisations | Sri Lanka foundation Institute | 14.09.2011 - 15-09.2011 |
| 14 | கலாநிதி எச்.ஏ.ஜி.ஜயதிஸ்ஸ<br>திருமதி எஸ்.கே.முத்துரட்ண<br>திருமதி ஏ.எம்.எஸ். திசாநாயக்க<br>டி.எஸ்.பிரேமசிறி | Training workshop on Foresight Analysis | NSF | 27.09.2011 - 29.09.2011 |
| 15 | திருமதி எஸ்.வி.டயஸ்<br>தயான் முனசிங்க<br>டி.எஸ்.பிரேமசிறி திருமதி பி.ஏ.பஸநாயக்க | Training Programme on Preparation of Greenhouse Gas Inventory | சுற்றாடல் அமைச்சு | 9.2011 |
| 16 | திருமதி ஜே.கே ஜயவர்தன<br>பி.தர்மசேன<br>ஏம்.எச்.ஆர்.மதுரங்க<br>எம்.டி.ஜே.பத்திராஜா<br>எச்.சி.எஸ். ரத்னசிறி | Urbanization, Climate Change and minimisation of Disaster Effects | SEC | 28.09.2011 |
| 17 | கலாநிதி எச்.ஏ.ஜி.ஜயதிஸ்ஸ<br>திருமதி கே.எம் வீரசிங்க<br>பி.தர்மசேன | Workshop on Fundamentals of Project Management | NSTC | 28.09.2011 |
| 18 | ஆர்.எம்.எஸ்.பண்டார<br>திருமதி கே.எம் வீரசிங்க<br>எம்.ஜ.டி.எச்.விஜயவிக்ரம | Use of Space technology for Disaster Management | DMC | 17.10.2011 - 21.10.2011 |
| 19 | திருமதி.கே.எம்.டி.எல். பீரிஸ் | Monsoon Forum | வளிடண்டலவியல் திணைக்களம் | 04.11.2011 |

# ஒவ்வொரு பிரிவினதும் வளர்ச்சிப்போக்கு

## 1. மண்சரிவுகள் ஆய்வு மற்றும் சேவைகள் பிரிவு [LSSD]

மண்சரிவுகள் ஆய்வு மற்றும் சேவைகள் பிரிவானது, பின்வரும் பிரதானமான விடயப் பரப்புகளில் அதன் செயற்பாடுகளை அறிக்கையிடப்படும் 2011ஆம் வருடத்தின்போது நடாத்தியது.

i. மண்சரிவு ஆபத்து வலய வரைபடமாக்கம்
ii. மண்சரிவு கட்டுப்படுத்துகை வேலை
iii. மண்சரிவு அறிவூட்டுகை மற்றும் பயிற்சி
iv. மண்சரிவு முன்னெச்சரிக்கை
v. விசேட கண்டறிவுகள்
vi. மண்சரிவு ஆராய்ச்சிகள்
vii. மண்சரிவு விடுவிப்புச் சான்றிதழ்களின் வழங்கல்

**i. மண்சரிவு ஆபத்து வலய வரைபடமாக்கம்**

பிரிவின் பிரதான நடவடிக்கையான மண்சரிவு ஆபத்து வலய வரைபடமாக்கல் வேலைகள் கண்டி, களுத்துறை, நுவரெலியா மற்றும் காலி மாவட்டங்களில் அரசாங்க மானியம் அதேபோல் UNDP மானிய செயற்திட்டத்தின் கீழ் தொடர்கின்றன. களுத்துறை மாவட்டத்தின் வரைபடமாக்கம் (420 சதுர கி.மீ.) 1:10,000 அளவீட்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மொத்தம் 640 சதுர கி.மீ பரப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ( 2010 இல் 220 சதுர கி.மீ மற்றும் 2011 இல் 420 சதுர கி.மீ). 1:50,000 அளவீட்டிலான மண்சரிவு ஆபத்து வலய வரைபடமாக்கம் அரச மானியத்தின் கீழ் காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களை உள்ளடக்கி 95% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

DMCயினூடாக UNDPயினால் மானியமளிக்கப்பட்ட அபாய தோற்ற-முக தயாரிப்பு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நுவரெலியா மாவட்டத்தின் 440 சதுர கி.மீ. மற்றும் காலி மாவட்டத்தின் 400 சதுர கி.மீ. பரப்பளவுகளை உள்ளடக்கிய மண்சரிவு ஆபத்து வலய தேச வரைபடங்கள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்டுள்ள சகல தேச வரைபடங்களும் DMCயிடம் கையள்க்கப்பட்டுள்ளன.

**ii. நுவரெலியா, கண்டி,மாத்தளை மற்றும் பதுளை மாவட்டங்னளில் அதி அபாயமான மண்சரிவு மற்றும் பாறை விழுகைத் தலங்களில் கட்டுப்படுத்துகை மற்றும் சாய்வு ஸ்திரப்படுத்துகை**

பின்வரும் இடங்களில் மண்சரிவு கட்டுப்படுத்துகைச் செயற்பாடுகள் கீழ்வரும் விடயப் பரப்புகளுக்கு DMCயினூடாக NBROவினால் சமர்ப்பிக்கபட்பட்ட பிரேரணைகளுக்கு அமையவாக அரச மானியத்தின் கிழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**அ. பேராதனையில் மண்சரிவு கட்டுப்படுத்துகை வேலை**

பேராதனை ஆபத்துப் பிரதேசத்தில் மண்சரிவு கட்டுப்படுத்துகை வேலையின் முதற் கட்டம் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டதுடன் NBROவினால் கண்டி – கொழும்பு பிரதான பாதையை பொதுமக்களுக்காக திறக்க முடிந்தது. வெட்டப்பட்ட சாய்வின் மொத்தப் பரப்பு 2500 சதுர.மீ இல் புல் பதிப்பது பூர்த்தியாகியுள்ளதுடன் வடிகால்களின் நிர்மாணிப்பு நடைபெறுகின்றது. அதில் மொத்த நிலத்தில் 75% பூர்த்தியடைந்துள்ளது. வெட்டப்பட்ட சாய்வின் கீழ்ப்பாகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பாறையை ஒழுங்கமைப்பதற்காக இரசாயனத் தகர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொத்த பரப்பான 650கன.மீ. இன் 80% அகற்றுகை பூர்த்தி செய்யப்பட்டள்ளது. அப்பாகத்திலுள்ள அதிகாரமளிக்கப்படாத கடைகள் காரணமாக முன்னோக்கிச் செல்வது மிகவும் கடினமாகவுள்ளது. அவற்றை அகற்றுமாறு அதிகாரமளிக்கப்பட்ட அமைப்புக்களினூடாக பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இன்னமும் பிரச்சினை இருப்பதனால் அகழ்வு செய்வது தாமதமாகிறது.

**ஆ. பதியப்பலல்ல நகரப் பிரதேசத்தில் மண்சரிவு கட்டுப்படுத்துகை வேலை**

இவ் வருடத்தின்போது பதியப்பலல்ல நகரப் பிரதேசத்தில் மண்சரிவு கட்டுப்படுத்துகை வேலை நடைபெற்றுவருகின்றது. கீழ் மற்றும் மத்திய மட்டங்களில் தாங்கு சுவர்களின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுவர் 'A'யின் (கீழ்) 60மீ நீளம் (80%) மற்றும் சுவர் 'C'apd (மத்திய) 50மீ நீளம் (62%) களின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது சுவர் 'B'யின் 22 மீ நீளமான பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

**இ. மாத்தளைப் பிரதேசத்தில் தரை உள்ளிறக்கத்திலான ஆய்வு**

வலயமாக்க தெச வரைபடங்களின் தயாரிப்பு மற்றும் அவற்றை மாத்தளை மாவட்டத்தில் பங்கீடுபாடுடையோருக்கு வினியோகிப்பது பூர்த்தியாகியுள்ளது. மாத்தளைப் பிரதேசத்தில் நில உள்ளிறக்கம் தொடர்பான கையேடுகளைத் தயாரிப்பது மற்றும் வினியோகிப்பது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. NBROவினால் தயாரிக்கப்பட்ட வெடிப்பு கண்காணிப்பு உபகரணத்தின் பொருத்துகையுடன் வெடிப்பு கண்காணிப்பு ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. வெடிப்பு கண்காணிப்பு ஆய்வு நடைபெற்றுவருவதுடன் இறுதி அறிக்கை தயாரிப்பும் நடைபெறுகிறது.

**ஈ. பதுளை மாவட்டதடதில் நிலப் பாவனையுடன் மண்சரிவு ஆபத்து வலய வரைபட மதிப்பாய்வு**

இவ் வருடத்தின்போது இந் நடவடிக்கைகளும் கூட தொடரப்பட்டதுடன் கள வரைபடமாக்கம் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### iii. மண்சரிவு அறிவூட்டல் மற்றும் பயிற்சி

அ. நிதிப் பற்றாக்குறை காரணமாக தனியான மண்சரிவு அறிவூட்டல் நிகழ்சிசித் திட்டங்கள் NBROவினால் இவ் வருடத்தின் போது ஒழுங்கமைக்கப்படவில்லை. எமது பிரிவிலிருந்தும் மண்சரிவு நிபுணர்களும் வளவாளர்களும் வளிமண்டலவியல் திணைக்களம், DMC, பல்கலைக்கழகங்கள், SLIDA, CHPB, UNDP, JICA, செஞ்சிலுவை, ஆசியா நிறுவனம் போன்ற வெவ்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியிருந்தனர்.

ஆ. பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்தும் 38ற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு அவர்களது விஞ்ஞான இளமானி, விஞ்ஞான முதுமானி மற்றும் பாடசாலை ஒப்படை அறிக்கைகளை செய்வதற்கு உதவிகளும் வளங்களும் தரப்பட்டன.

### iv. மண்சரிவு முன்னெச்சரிக்கை

இலங்கையில் மண்சரிவின் பிரதான குவியப் புள்ளியாக NBROவின் LSSD ஆனது அதன் சேவைகளை ஒவ்வொரு மழைக்காலப்பகுதியின் போதும் வருடம் முழுவதும் வெற்றிகரமாக செய்து வருகிறது. மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களை உள்ளடக்கி 100 தானியங்கி மழைமானிகளை நிறுவுவதற்கு LSSDயினால் UNDPயிற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணையானது ஏற்றுக்கொள்ளப்பட்டது. தானியங்கி மழைமானிகளின் நிறுவுகையானது இலங்கையின் மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு மேலும் செம்மையாக 'அதே-நேரத்திலே' ஆன மண்சரிவு முன்னெச்சரிக்கையைத் தருவதற்கு NBROவிற்கு உதவியாகவிருக்கும். மழைமானியின் பிரதான வழங்குனரை தெரிவு செய்வது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் UNDP நடவடிக்கைகளுக்கான நெறிப்படுத்தும் குழுவின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கின்றது. UNDP நிதியில்லாமையால் இச் செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இரண்டு தானியங்கி மழைமானிகள் நோர்வேஜிய புவித்தொழிநுட்பவியல் நிறுவனத்தினால் ADPCயினால் ஒழுங்கமைக்கப்படும் RACLAIM நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றது. இந்த இரண்டு மழைமானிகளும் வலப்பனை மற்றும் பேராதனை பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

**எ. விசேட கண்டறிவுகள்**

2011 ஆம் வருடத்தின்போது அரசாங்க அமைப்புகள், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தனியார் துறையினருக் விசேட கண்டறிவுககளை நடாத்தி பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் ஆய்வுகளின் மத்தியில், தேசிய செயற் திட்டங்களுடன் தொடர்பான விசேட ஆய்வுகளும் பூர்த்தி செய்யப்பட்டதுடன் எலகர பிரதேசத்தில் களுகங்கை நீர் மின்சார செயற் திட்டம் போன்ற பெரிய அபிவிருத்திச் செயற் திட்டங்களில் EIA செயன்முறையில் செயற்திட்டத்திற்கு அங்கீகாரமளிக்கும் அமைப்பாக ஊக்கத்துடன் பங்குபற்றியது. இதற்கும் அப்பால் கல் குவாரிகள், சிறிய நீர் மின் திட்டங்கள், ஆறுகள் திசைமாற்றும் செயற் திட்டங்கள், இரத்தினக்கல் அகழ்வுத் தலங்களில் ஸ்திரத்தன்மை, கட்டிட நிர்மாணத் தலங்கள் போன்ற பின்வரும் ஆய்வுகளும் அக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

**விசேட கண்டறிவுப்பட்டியல் - 2011**

| இல | மாவட்டம் | கண்டறிவுகள் | |
|---|---|---|---|
| | | சேவைகள் | உசாத்துணை |
| 01 | பதுளை | 120 | 66 |
| 02 | கொழும்பு | 15 | 46 |
| 03 | காலி | 20 | 54 |
| 04 | கம்பஹா | 0 | 6 |
| 05 | அம்பாந்தோட்டை | 1 | 2 |
| 06 | களுத்துறை | 60 | 48 |
| 07 | கண்டி | 118 | 583 |
| 08 | கேகாலை | 184 | 346 |
| 09 | குருநாகலை | 3 | 5 |
| 10 | மாத்தளை | 88 | 124 |
| 11 | மாத்தறை | 13 | 59 |
| 12 | நுவரெலியா | 36 | 56 |
| 13 | இரத்தினபுரி | 40 | 29 |
| | **மொத்தம்** | **698** | **1424** |

**vi. விசேட செயற்திட்டங்கள்**

கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் மல்ஹேவா பாறை விழுகை தலத்திற்கான மண்சரிவு கட்டுப்படுத்துகை பிரேரணை நுவரெலியா மாவட்ட மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் 2011இல் பூர்த்தி செய்யப்பட்டது.

கரண்டியல்ல மண்சரிவு பிரதேசத்தின் கண்டறிவுகள் 2012 ஆகஸ்ட்டில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்கின்றன. மொத்த நீளமான மீ.ஐ உள்ளடக்கிய நான்கு நிலத்-துளையிடர்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. புதிதாக வாங்கப்பட்ட Resistivity Imaging கருவியைப் பாவித்து அப் பிரதேசத்திற்கான Resistivity ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. திறைசேரியிலிருந்து பெறப்பட்ட கண்டறிவிற்கான மொத்த பெறுமதி 5மில்லியன் ரூபா. தடையை ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டுப்படுத்துகை நடவடிக்கைளுக்காக விபரமான ஆய்வுகள் செய்வதற்கு வலப்பனை மகாவெவ மற்றும் இரத்தினபுரி கலபொல பகுதிகளில் இரண்டு மண்சரிவுத் தலங்கள் தெரிவுசெய்யப்பட்டது. இந்த இரண்டு தலங்களிலும் 2010இல் கண்காணிப்பு கருவிகள் நிறுவப்பட்டதுடன் 2011 காலப்பகுதியில் கண்காணிப்பு நடைபெற்றுவந்தது.

கண்காணிப்புத் தரவுகள் பெறுபேறாக கலபொல மண்சரிவுத் தலத்தில் JICA மற்றும் NBRO குழுக்களினால் கட்டுப்படுத்துகை செயல்வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. கட்டுப்படுத்துகை செயல்வழிமுறைகளின் வடிவமைப்பு நடைபெற்று வருகிறது.

**vii. ஆராய்ச்சி வேலை**

ஆராய்ச்சி ஆளணி மற்றும் தனியான நிதிகளின் பற்றாக்குறை காரணமாக மண்சரிவு ஆய்வுகள் மற்றும் சேவைகள் பிரிவானது ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு விசேட கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால் மண்சரிவு அபாய வலய வரைபடமாக்கம் சரியான நேரகால எதிர்வு கூறல் மற்றும் மண்சரிவு கட்டுப்படுத்தல் வேலைகளுக்குச் சமாந்தரமாக, பெரம்பாலான எமது விஞ்ஞானிகள் பயன்விளைவுள்ள மண்சரிவு முன்னெச்சரிக்கை முறைமைகள் மற்றும் பயன்விளைவுள்ள மற்றும் மேம்பட்ட மண்சரிவுகள் கட்டுப்படுத்தல் முறைகளை விருத்தி செய்வதற்காக தரவுகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.

**viii. இலங்கையின் மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் எந்தவகையிலுமான நிர்மாணங்களுக்கும் மண்சரிவு விடுவிப்புச் சான்றிதழ்/அறிக்கைகள் வழங்குதல்**

இலங்கைப் பாராளுமன்றத்தின் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்ட பிற்பாடு 2011 பெப்ரவரி 15இல் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் சகல உள்ளூராட்சி அமைப்புக்கள் மற்றும் செயற்திட்ட அங்கீகரிப்பு முகவரகங்களுக்கு சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. அச் சுற்றரிக்கையின் பெறுபேறாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, கழுத்துறை காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 9 பிராந்திய அலுவலகங்களை 2011 மார்ச் 1இல் ஆரம்பித்தது. விடுவிப்புச் சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடு 2011ஆம் வருடத்தின் போதும் தொடர்ந்தது. 2011 மார்ச் 1இலிருந்து 2011 டிசம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது 12301 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. 11485 கண்டறிவுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 9995 விடுவிப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 2. சுற்றாடற் பிரிவு [ED]

### 1 அனுசரணையளிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் உசாத்துணை வேலைகள்

அனுசரணையளிக்கப்பட்ட ஆராய்ச்சி செயற் திட்டங்கள் மற்றும் நீர், கழிவு நீர், மண், வண்டல் படிவுகளின் தர மதிப்பீடு, கட்டிடத் திரவியங்கள் பரிசோதனை, அம்பியன்ற் வளி, வாயு வெளிவிடுகைகள், இரைச்சல் மற்றும் அதிர்வு மட்டங்களின் கண்காணிப்பு மற்றும் தர மதிப்பீடு காலாகால சுற்றாடல் மதிப்பீட்டு செயற் திட்டங்கள் மற்றும் சுற்றாடலியல் ஆய்வுகள் போன்ற உசாத்துணைச் சேவைகளை வழங்குதல் மூலம் சுற்றாடற் பிரிவானது வருமானத்தை ஈட்டுகிறது.

**ஆராய்ச்சி செயற் திட்டம்: களனி ஆற்று நீரேந்து பரப்பின் மேல் நீரேந்து பிரதேசத்திற்கான நீரேந்து பிரதேசம்.்.நீர் வள சுகாதார மதிப்பாய்வு நிகள்ச்சித் திட்டம் (காலப்பகுதி: 2010 – 2011)**

களனி ஆற்று நீரேந்து பரப்பின் மேல் நீரேந்து பிரதேசத்திற்கான நீரேந்து பிரதேசம்/நீர் வள சுகாதார மதிப்பாய்வு நிகள்ச்சித் திட்டத்தை தாபிப்பதில் இச் செயற் திட்டம் கவனஞ் செலுத்துகிறது. இது தொடர்பில் களனி ஆற்று நீரேந்து பரப்பின் மேல் நீரேந்து பிரதேசத்திற்கான மாதிரி செயற் திட்டமொன்றாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இது இச் செயற் திட்டத்தின் கட்டம் 1 ஆவதுடன், இதன வெளிப்பாடுகள் மனிதத் தலையீடுகளின் தாக்கங்களை மதிப்பாய்வதற்கும் நீரேந்து பிரதேசத்தின் சுகாதாரத்தை அளவிடுவதற்குமான கண்காணிப்புக் கருவியொன்றை அபிவிருத்தி செய்வதற்கும் பாவிக்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட செயற் திட்டப் பிரதேசமானது, மஸ்கெலி ஓயா மற்றும் கெஹெல்கமுவ ஓயாவின் மேல் நீரேந்து பிரதேசமாகும். இது மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவினுள் 54 கிராம அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கி 407 சதுர கி.மீ இல் பரந்த பிரதேசத்தைக் கொண்டுள்ளதுடன் களனி ஆற்றுக்கு நீரைக்

கொண்டுவரும் இரு அருவிகளையும் கொண்டது. களனி ஆற்றுக்கு வீசேட மீட்டலுடனான நீரேந்து பிரதேச மதிப்பாய்வுகளிலான கடந்த கால ஆய்வுகளின் மேலோட்டமான பார்வை ஒன்றுடனான ஆரம்ப அறிக்கை DMCயிற்கு சமா்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் பல்வேறு பங்கீடுபாடுடைய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் போன்றன நீரேந்து பிரதேசத்திற்கு சம்பந்தமான தகவல்களைச் சேகரிக்கம்போது ஆலோசிக்கப்பட்டனா். நிா்வாகம், வளங்கள் (வனம், வன விலங்ககள்) விவசாயம் மற்றும் தோட்டங்கள், நிலப்பாவனை, குடியமா்வுகள், சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு, சமூக நீா் வழங்கல் செயற்திட்ங்கள், பெரிய அல்லது சிறிய நீா் மின் வலு செயற் திட்டங்கள், அனா்த்தங்கள் மற்றும் தொழிற்துறைகள் போன்றவற்றிலான தரவுகளை கிடைக்கம் தகவல்கள் உள்ளடக்குகின்றன.

நீரின் தர மதிப்பீட்டாய்வுக்கான திட்டம், அருவிப் பாய்ச்சலை அளவிடுவதறடகான தழட்டம், கோரப்படும் தரவுகள் மற்றும் தரவு சேகரிப்பு வடிவஙடகள், தகவல் பகுப்பாய்வு முறைகள் மற்றும் வடிவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய இறுதி அறிக்கையானது நீரேந்து பரப்பு தகவல் சீா்தூக்கல் முறைகளுடன் நிதி வழங்கும் அமைப்புகளான DMC மற்றும் UNDPயிற்கு சமா்ப்பிக்கப்பட்டன.

**உசாத்துணைச் செயற் திட்டம்: பேராதனை மண்சரிவு கட்டுப்படுத்துகைச் செயற்திட்டத்திற்கான சுற்றாடல் திட்டமிடுகை (காலப்பகுதி2010 – 2011):**

சுற்றாடல் பிரிவானது NBROவின் மண்சரிவு ஆய்வுகள் மற்றும் சேவைகள் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுத்தப்படும் பேராதனை மண்சரிவு கட்டுப்படுத்துகைச் செயற்திட்டத்திற்கான சுற்றாடல் திட்டமிடுகையை (EMP) தயாரித்தது. EMPயானது செயற்திட்ட நடவடிக்கைகளின் காரணமாக விளையும் அழுத்தமான எதிா்த் தாக்கங்களைக் கண்டறிவதுடன் அவற்றைக் கட்டுப்படத்துவதற்கு அல்லது இழிவாக்குவதற்கான செயன்முறைகள் /திட்டங்களையும் தருகிறது.

ஏசியா பவா் லிமிட்டட் இன் சுற்றா்டல் நிலமை அறிக்கையின் தொகுப்பு மற்றும் வீதி மற்றும் துறைமுக நிா்மாண செயற் திட்டங்கள், தொழிற்சாலை மற்றும் அனல் மின் நிலையங்களுக்கான சுற்றாடலியல் கண்காணிப்பு என்பன 2011 ஆம் வருடத்திற்கான மிகவும் முக்கியமான உசாத்துணை வேலையாகும்.

# 3 கட்டிடத் திரவியங்கள் பிரிவு [BMD]

BMDயானது, கட்டிட மற்றும் நிா்மாணத் திரவியங்களின் துறையில் **பரிசோதனை மற்றும் தரக் கட்டுப்பாட்டுச் சேவைகளை** வழங்குவதுடன் தரக்கட்டுப்பாட்டு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதலில் தொழிற்துறைக்கு உதவுதல், தகவல் மற்றும் ஆராய்ச்சிக் கண்டறிவுகளைப் பரப்புதல் மற்றும் எப்படி என அறியும் வழிகாட்டல்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல்களை செய்கிறது. மாகாண சபை அதிகாரிகளினால் கேட்கப்பட்டதற்கமைய வட மாகாணத்திலிருந்து வந்த பொறியியலாளா்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளா்களுக்கு திரவிய பரிசோதனையில் பயிற்சி நிகள்ச்சிகளை அப் பிரிவு நடாத்தியது

கட்டிடத் திரவியங்கள் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைப் பிரிவானது, கட்டிடத் திரவியங்களின் ஆய்வுகூட மற்றும் அதே இடத்திலான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான தகவுடைய பரந்த வீச்சிலான பௌதீக மற்றும் இயந்திரவியல் பரிசோதன உபகரணங்களைக் கொண்டுள்ளது. BMDயின் ஆற்றலும் தகைமையுமுடைய ஆளணியினா், வேலை தருனரின் தேவைப்பாடுகளை அடைவதற்கான இலங்கை

நியமங்கள் அல்லது நியமங்கள் அல்லாத பரிசோதனைகளில் ஏனைய வரையறைகளுக்கமைவாக தொழிற்றுறைக்கு பரிசோதனை மற்றும் உசாத்துணைச் சேவைகளை தருகின்றனர்.

**வருடம் 2011இல் உசாத்துணை வேலைகள் மற்றும் ஆராய்ச்சிகளின் சாரம்**

| பரிசோதனை-உசாத்துணை வகை | செய்யப்பட்ட ஒப்படைகள் |
|---|---|
| 1) கொங்கிறீற் பரிசோதனை<br>2) வலுவூட்டல் மற்றும் கட்டமைப்பு, உருக்கு<br>3) நானாவித பரிசோதனை | 1645<br>299<br>404 |
| **மொத்தம்** | 2348 |

**ஆராய்ச்சி ஆய்வுகள்**

1) உசாத்துணை நோக்கங்களுக்காக ஏற்கனவே உள்ள கொங்கிறிற் பரிசோதனை பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.
2) Rebound Hammer மற்றும் Windsor Probe என்பவற்றுக்கான சீராக்கல் வளையிகள் ஆய்வுகூட ஒத்திகைகளைப் பாவித்து வரையப்பட்டன.

**விசேட செயற் திட்டங்கள்**

கண்ணாடி நார்களினால் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் மீது புதிய பரிசோதனை நிகள்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
இது, *சோலார்ஸ் மரைன் பிறைவேட் லிமிட்டட்* இன் கோரிக்கையின்பேரில் கையேற்கப்பட்டதுடன் *இந்திய கப்பற்றுறை பதிவகத்தின்* பிதிநிதியின் முன்னிலையில் பரிசோதனை செய்யப்பட்டது.

## புவித் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு [GED]

புவித் தொழில்நுட்ப பொறியியல் மற்றும் பரிசோதனைப் பிரிவானது (GED) பிரதானமான இலக்குகளாவன, ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் மேற்கொள்ளல் மற்றும் புவித் தொழில்நுட்ப பொறியியல் களத்தில் இனர்த்த இபாயக் கறைப்பு மற்றும் பாமுகாப்பான கட்டுமான சுற்றாடலுக்கானதேரிழில்நுட்பச் சேவைகளை வழங்குதல் என்பனவாகும். அதேயிடத்தில் தோன்றிய மண், விரிவடையக்கூடிய மண் மற்றும் சேதன-உக்கல் மண் (Peat soil) என்பவற்றின் நடத்தைகளை விளங்கிக் கொள்வதிலான ஆராச்சி மற்றும் பிரச்சனைக்குரிய மண் வகைகளின் மீது பொருத்தமான நிர்மாணத் தொழில் நுட்பங்களைக் கண்டறிதல் என்பன பிரதானமான ஆர்வத்திற்குரியனவாகவுள்ளன.

GEDயானது, நில துளையிடல் மற்றும் அதன் நன்கு உபகரணமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தில் புவித் திரவியங்களின் பரிசோதனை அடங்கலான புவித் தொழில்நுட்பவியல் கண்டறிவுகளை மேற்கொள்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஓர் அமைப்பாக அதன் தகைமையை தாபித்துக் கொண்டுள்ளது. புவித் தொழில்நுட்ப பொறியியல் ஆய்வுகூடமானது எல்லா வகையான களப் பரிசோதனைகள் மற்றும் எளிய வகைப்படுத்தல் பரிசோதனைகளிலிருந்து Triaxial மற்றும் Consolidation பரிசோதனைகள் போன்ற உயர்தர முன்னோடியான மண் பரிசோதனைகளை மேற்கொள்வதுடன் கட்டமைப்பின் வடிவமைப்பிற்கு தேவைப்படும் மண்ணின் சகல பரிமாணங்களையும் தரும் ஆற்றலைக் கொண்டுள்ளது. GETயானது, சாய்வின் ஸ்திரத் தன்மையை பகுப்பாய்வதற்காகவும் அனர்த்தத்திற்கு ஏதுவாகவுமுள்ள கனதியான ஸ்திரமற்ற சாய்வுகளை ஸ்திரப்படுத்துவதற்காக பொருத்தமான தடுப்புச் செயன்முறைகளைக் கண்டறிவதற்காக NBROவின் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் அபாய முகாமைத்துவ பிரிவுடன் (LSSD) இணைந்து வேலை செய்கின்றது.

## கையேற்கப்பட்ட தொழில்நுட்பவியல் கண்டறிவுச் செயற் திட்டங்கள்

| செயற் திட்ட இல. | விவரணம் | வேலை தருனர் |
|---|---|---|
| 23956 | கரண்டியல்ல மண்சரிவு கட்டுக்கடுத்துகைச் செயற் திட்டத்திற்காக புவித் தொழில்நுட்பவியல் கண்டறிவு | DMC/LSSD |
| 23655 | திருகோணமலை இலங்கை கடற்படை டொக்யார்ட் வழிந்தோடும் பாதைக்கான புவித் தொழில்நுட்பவியல் கண்டறிவு | இலங்கை கடற்படை |
| 23779 | நிவித்திகல நகர அபிவிருத்தி செயற் திட்டத்திற்காக பிரேரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கை | நிவித்திகல பிரதேச சபை |
| 23816 | பதுளை , கெப்பிற்றிபொல வீதியில் ஊவா மாகாண சபையின் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கான உத்தேச ஐந்து மாடிக் கட்டிடம் | ஊவா மாகாண சபை |
| 23252 | கொட்டாவையிலிருந்து குருந்தகஹஹெக்டேக்ம வரை STDPயின் புவித் தொழில்நுட்பவியல் கண்டறிவுகளுக்கான நிர்மாண மேற்பார்வை | நிசோஸ் டிவலப்மன்ட் கொன்சல்டன்ட் லிமிட்டட் மற்றும் ஓரியன்ரல் கொன்சல்டன்ட் கொம்பனி லிமிட்டட் |
| 23252.37யு | கொட்டாவையிலிருந்து குருந்தகஹஹெக்டேக்ம வரை JBICநிதியிடப்பட்ட பிரிவு STDPயின் நிர்மாண மேற்பார்வை | RDC |
| 23755 | கொழும்பு சாக்கடை பம்பி நிலையத்தில் புவிமெற்பரப்பியல் ஆய்வு மற்றும் கள கண்டறிவுகள் | கொழும்பு மாநகர சபை |
| 23795 | சாலமுல்ல LIC வீடமைப்புத் திட்டத்திற்கான மண் கண்டறிவுகள் | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| 23814 | அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் உத்தேச கட்டிட நிர்மாண தலத்தில் மண் கண்டறிவுகள் | இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை |
| 23830 | பத்தரமுல்ல- அக்கருகொடவில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைகளின் தலைமையக நிர்மாண செயற் திட்டத்திற்காக ஆய்வுகூட வசதிகளைத் தருதல் | பதுகாப்பு அமைச்சு |

## 5 செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு (PMD)

PMDயானது கட்டிடக்கலை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புகள், கணிய அளவையியல், மின்- இயந்திரவியற் பொறியியல் மற்றும் கேள்விப் பத்திரம் தயாரித்தல், கேள்விப்பத'திர மதிப்பாய்வு, ஒப்பந்ததாரர் தெரிவு, ஒப்பந்த நிர்வாகம் மற்றும் நிர்மாண காலப்பகுதியின்போது தர நியமங்களை அடைவதற்கான நிர்மாண மேற்பார்வை போன்ற செயற் திட்ட முகாமைத்துவச் சேவைகள் அடங்கலாக பொது மற்றும் தனியார் துறையின் கட்டிட செயற் திட்டங்களுக்கு உசாத்துணைச் சேவைகளை தருகிறது. ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் நிலைமை மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு மற்றும் சேதங்களைத் திருத்தியமைத்தலுக்கான பரிந்துரைகள் அடங்கிய நிலைமை அறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் கட்டமைப்பு ஸ்திரத் தன்மையும்கூட கையேற்கப்படும்.

**இப் பிரிவானது அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களுக்காக கட்டிட செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட வேலைகளுக்கான உசாத்துணைச் சேவைகளை வழங்குகிறது.அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.**

- கட்டிடக்கலை, கட்டமைப்பு மற்றும் சேவைகளின் வரைபடங்கள் போன்றவற்றை வடிவமைத்தலும் தயாரிப்பும்.
- கேள்வி கோரல் ஆவணங்களின் தயாரிப்பு, கேள்வி கோரலுக்கான அழைப்பு, கேள்வி மனு மதிப்பாய்வு மற்றும் ஒப்பந்ததாரர் தெரிவுகளின் மீதான ஆலோசனை.
- நிர்மாண காலப்பகுதியின்போது தரக்கட்டுப்பாடு, நிர்மாண மேற்பார்வை அடங்கலான செயற்திட்ட முகாமைத்துவச் சேவைகள் மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துதல்.
- கட்டிடங்கள் மற்றும் தொடர்புபட்ட கட்டுமானங்களின் கட்டமைப்புப் பாதகாப்பு மீதான ஆய்வு, தற்போதுள்ள கட்டிடங்கள் மற்றும் தொடர்புபட்ட கட்டுமானங்களின்

முன்னேற்றத்திற்காக கட்டிடக்கலை மற்றும் ஏனைய விசேடத்துவ சேவைகளிலான ஆலோசனை மற்றும் அவற்றிலான நிலமை அறிக்கை சமா்ப்பித்தல்.
- பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளல்.

**2011ஆம் ஆண்டின்போது பொறுப்பேற்கப்பட்ட ஒப்படைகள்**

**i கட்டிட செயற் திட்டங்கள் -**

- மீயுயா் நீதிமற்ற வளாகம் மற்றும் நிதி அமைச்சகத்தின் திருத்தம் மற்றும் மீளமைப்பு வேலைகளுக்கான உசாத்துணைச் சேவைகளை வழங்குதல்.
- முல்லேரியா பிரதேச சபைக்காக ரி.பி. இலங்கரத்ன பாா்வையாளா் அரங்குக்கான கட்டமைப்பு வரைபடங்களின் நிா்மாணம்.
- களனி பிரதேச சபைக்காக, ஹுணுப்பிட்டியில் உத்தேச வா்த்தக கூட்டுத்தொகுதி நிா்மாணத்திற்கான உசாத்துணைச் சேவைகள்.
- களனி பிரதேச சபைக்காக, களனியில் உத்தேச பேரூந்து நிலையம் மற்றும் வா்த்தக கூட்டுத்தொகுதி நிா்மாணம் மற்றும் களனி பிரதேச சபைக்காக கட்டம் – 2 நிா்மாணத்திற்கான உசாத்துணைச் சேவைகள்.
- களனி பிரதேச சபைக்காக, ஹுணுப்பிட்டியில் உத்தேச முன்-பள்ளிக் கட்டிடத்திற்கான நிா்மாணத்திற்காக உசாத்துணைச் சேவைகள்.
- பிலப்பிட்டிய- பரணஸ்கந்த வீதி உத்தேச நூலகக் கட்டிடம் மற்றும் சமூக மண்டப நிா்மாணத்திற்கான உசாத்துணைச் சேவைகள்.
- கழிவு முகாமைத்துவ அதிகாரசபைக்காக கரடியாபவில் உத்தேச கூட்டெரு தயாரிக்கும் வசதிக்காக அத்திவார வேலை மேற்பாா்வை.
- கிளிநொச்சியில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் இரண்டு மாடிக் கட்டிடங்களின் புதுப்பித்தல்.

**ii நில நிரப்புகைத் தலங்கள் -**

- நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக உத்தேச உயா் மட்டத்திலான, விளையாட்டுத் தொகுதியும், விளையாட்டுப் பயிற்சி நிலைய நிா்மாணத்திற்கு பொறியியலாளரின் பிரதிநிதியாக சேவையாற்றுகை மற்றும் முழுநேர நிா்மாண வேலை மேற்பாா்வை மற்றும் கொடுப்பனவுச் செயற்பாடுகளைச் சான்றுப்படுத்துகை. (தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது)

- நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக, கொழும்பு கிருலப்பனை கொலம்பகே மாவத்தையில் செல்லும் வீதியும் நில நிரப்புகை வேலை, வடிகாலமைப்பு முறைமை நிா்மாணம் மற்றும் செயற் திட்ட முகாமைத்துவம். (தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது)

**iii நானாவித அறிக்கைகள்**

- நிலமை அறிக்கைகள் - 51
- கேள்விப் பத்திர மதிப்பாய்வு அறிக்கைகள் - 10

## 6. மனித குடியமா்வுகள் பிரிவு [HSD]

பாா்வையிலுள்ள வருடத்தின்போது HSDயானது, மானிட குடியிருப்புக்கள், அனா்த்த அபாயக் குறைப்பு, அனா்த்தத்திற்குத் தாக்குப்பிடிக்கும் வீடமைப்பு நிா்மாணங்கள், அனா்த்த அபாய மதிப்பீட்டாய்வுகள் மற்றும் பயிற்சி மற்றும் அறிவூட்டற் செயற் திட்டங்களுக்குத் தொடா்பான நிகள்ச்சித் திட்டங்களை மேற்கொண்டது. மேற்படி விடயப் பரப்புகளுக்கு அப்பால் மண்சரிவு ஆபத்து தேச-வரைபடமாக்கல் நிகள்ச்சித் திட்டத்திற்காக நிலப் பாவனை மற்றும் நில அமைப்பு தேச வரைபடங்களை தயாரித்துள்ளது.

**உசாத்துணை வேலைகள்**

- பேராதனை நகரத்தில் மண்சரிவு கட்டுப்படுத்துகைக்கான குடியிருப்பு உள்வாங்கல் மற்றும் நிர்மாண வழிகாட்டிகள் - வேலை தருனர் – அனர்த்த முகாமைத்துவ நிலையம்/LSSD
- பதியப்பலல்ல நகரில் மண்சரிவு ஆபத்துக் கட்டுப்படுத்துகைசெயற்திட்டத்தில் செயற்திட்ட நியாயப்படுத்துகை மற்றும் மனித குடியிருப்புக்கள் ஆய்வு(கட்டம் 11) வேலை தருனர் – அனர்த்த முகாமைத்துவ நிலையம்/LSSD
- மண்சரிவுப் பிரதேசங்களில் அபிவிருத்தி/கட்டிட நிர்மாணத்திற்கான விடுவிப்பு-மானிட குடியிருப்புக்கள் அபாய முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடல் உபாயம்.
- மகாவலி நீரேந்து பிரதேசத்தில் காலநிலை மாற்ற இயைபாக்க ஆராய்ச்சிச் செயற்திட்டத்தின் பரிசோதனை முன்ஆய்வு – காலநிலைக்குத் தாக்க பிடிக்கும் கட்டிடச் சூழலை ஏற்படுத்துதல் - ஓர் கருத்தரங்கு – 12 ம 2011 வேலைதருனர் சக்தி மற்றும் சுற்றாடலுக்கான வன்டெர்பில்ட் நிறுவனம், வன்டர்பில்ட் பல்கலைக்கழகம் - அமெரிக்கா
- கடுவெவவில் பெரிய அளவீட்டிலான WTE செயற்திட்டத்திற்கான EIA இற்கான தற்போதுள்ள சுற்றாடலின் ஆய்வு – வேலைதருனர் - அனர்த்த முகாமைத்துவ நிலையம்/LSSD
- பொலன்னறுவையில் உத்தேச நகரப் பூங்காவுக்கான IEE ஆய்வு - வேலைதருனர் – தம்மன்கடுவ பிரதேச சபை
- APPC யின் TDLLI சாதனத்தொகுப்பின் அபிவிருத்திக்கான தொழிநுட்ப உசாத்துணை – வேலைதருனர் ஆகிய அனர்த்த முன்னாயத்த நிலையம்.

**ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி மற்றும் பயிற்சி பட்டறைகள்**

- பிராந்திய மட்ட திட்டமிடல், தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கான மானிட குடியமர்வுகளின் அனர்த்த முகாமைத்துவத்தில் பயிற்சி
  இலங்கை நீர் பங்குடமை – சர்வதேச நீர் முகாமைத்துவ நிலையம் (IWMI)
- மண்சரிவு பிரதேச அபிவிருத்திகட்டிட விடுவிப்புச் செயன்முறை, மானிட குடியமர்வுகள், அபாய முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடல் உபாயத்தில் பயிற்சிப் பட்டறை - சர்வதேச நீர் முகாமைத்துவ நிலையம்
- புவிதொழிநுட்ப வடிவமைப்பு மீது புத்துணர்வூட்டல் பாடநெறி இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL)
- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேசன் மற்றும் தச்சருக்கான அனர்த்தத்திற்கு தாக்குபிடிக்கும் நிர்மாணத் தொழிநுட்பங்களில் பயிற்சி. 2011-08-20 – மாகாண மந்திரவியல் - UNDP
- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேசன் மற்றும் தச்சருக்கான அனர்த்தத்திற்கு தாக்குபிடிக்கும் நிர்மாணத் தொழிநுட்பங்களில் பயிற்சி. வீரகெட்டிய மத்திய கல்லூரி – கொல்சிம் லங்கா லிமிட்டெட்.

**ஆராய்ச்சி**

**மண்சரிவு ஆபத்து வரைபடமாக்க செயற் திட்டம்.**
**செய்யப்பட்ட வேலை**
**காலி** மாவட்டத்தின் வரைபடமாக்க வேலைக்காக நிலப்பாவனை தேசவரைபட தயாரிப்பு 80/25, 80/24, 86/04, 86/05, 86/09, 86/15 வரைபடங்கள் (பூர்த்தி செய்யப்பட்டுள்ளது).

**காலி** மாவட்டத்தின் வரைபடமாக்க வேலைக்காக நிலஅமைப்பு தேசவரைபட தயாரிப்பு 80/25, 86/04, 80/19, 80/15, 80/20, 80/24, 86/15, 86/05, 86/09 வரைபடங்கள் (பூர்த்தி செய்யப்பட்டுள்ளது).

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இ
My No
டீஈ/ஜீ/என்பீஆர்ஓ/எவ்ஏ/2011

ඔබේ අංකය
உமது இல
No.

දිනය
திகதி
Date
2012 செப்தெம்பர் 26

பணிப்பாளர் நாயகம்,
தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம்

**தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 யூன் 30 ஆந் திகதி நிறுவனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவனத்தின் மீளாய்வாண்டின் இறுதியிலான 24,548,218 மொத்தக் கடன்பட்டோரில் ரூபா 3,578,389 தொகையான 38 கடன்பட்டோரிடம் இருந்து மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலான மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 24,548,218 தொகையான கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 7,397,411 தொகை 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது அறவிடப்பட உள்ள மீதியாகக் காணப்பட்டன. அத் தொகையை அறிவிடுவதற்காகவோ அல்லது அம் மீதியை அகற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலே கடன்பட்டோர் பெறுமதியில் ஆட்பதிவுத்திணைக்களத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டிய 15 ஆண்டுகள் பழமைவாய்ந்த ரூபா 851,064 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஏப்ரல் 06 ஆம் திகதி சட்டமா அதிபதி அத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நிறுவனத்திற்கு பிணை வழங்கியிருந்தார். எவ்வாறெனினும், மீளாய்வாண்டு வரையிலும் இத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்தக் கடன்கொடுத்தோர் ரூபா 2,084,027 இல் 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,859,489 ஆனதுடன் 23 ஆண்டுகள் கடந்த மீதி ரூபா 116,566 ஆகும். இதற்காக போதிய சான்றுகளோ அல்லது மீதிகளின் உறுதிப்படுத்தல்களோ கிடைக்கப்பெற்றிராததுடன் இம் மீதியைத் தீர்த்துக்கொள்வதற்காக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் முற்பணமாக வழங்கப்பட்டிருந்த முழுப் பணமும் நிதியாண்டின் திசெம்பர் 31 இல் தீர்த்துக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் நடப்பாண்டின் இறுதியில் அவ்வாறு தீர்க்கப்பட்டிராத முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 224,890 ஆகக் காணப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 371(2)(ஆ) | (i) நானாவித செயற்பாடுகளுக்காக நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட முற்பணங்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 20,000 இற்கு மேற்படலாகாத போதிலும் நிறுவனம் இதற்கு இணங்காதவகையில் 21 சந்தர்ப்பங்களின் போது அவ் எல்லையை மீறி முற்பணமாக ரூபா 772,008 தொகை வழங்கப்பட்டிருந்தது.<br>(ii) ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது செயற்பாட்டிற்காகப் பெறப்பட்ட முற்பணத்தை முறையாகத் தீர்த்ததன் பின்னர் அடுத்துவரும் செயற்பாட்டிற்காக முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தீர்க்கப்படாது பல்வேறு செயற்பாடுகளுக்காக ஒரே நாளிலோ அல்லது கிட்டிய நாட்களில் பல முற்பணங்கள் 09 உத்தியோகத்தர்கள் 43 செயற்பாடுகளுக்காக பெறப்பட்டிருந்த ரூபா 802,850 தொகையான இம் முற்பணத் தொகை நிதிப்பிரமாண அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371(2)(இ) | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் செயற்பாடு பூர்த்தியானவுடன் நிறுவகத்திற்குத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் பேணப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் 19 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 343,500 தொகையான முற்பணத் தொகை 01 மாதம் முதல் 06 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | நி.பி 751(1)(ஆ) மற்றும் 757(2) | நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது 37 மிகையும் குறைவுகளும் நிலவியதுடன் இது மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | நிறுவனத்தில் உள்ள 12 வாகனங்கள் தொடர்பான எரிபொருள் பயன்பாடு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிறுவனச் சுற்றறிக்கை<br>---------------------------------------<br>2011 ஏப்ரல் 07 ஆம் திகதிய என்பீஆர்ஓ/சீஜஆர்/2011/03 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிறுவனத்தினால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந் 10 வாடகை வாகனங்களுக்காக 43 சந்தர்ப்பங்களின் போது அவ் எல்லைகள் மீறப்பட்டு வழங்குனர்களுக்கு ரூபா 581,826 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதற்காக எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------------------

மண்சரிவை வரைபடத்தில் பதிவுசெய்யப்படுவதற்காகவும் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக முறையே ரூபா 17.5 மில்லியன் தொகையும் ரூபா 15 மில்லியன் தொகையும் திறைசேரியினால் நடப்பாண்டின் போது பெறப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகளுக்காக ரூபா 21.5 மில்லியன் வீதத்தில் ரூபா 43 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. பேற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு மேலாக செலவிடப்பட்டிருந்த ரூபா 10.5 மில்லியன் தொகைக்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான விளைவுகள் ரூபா 15,406,703 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,110,104 ஆகக் காணப்பட்டது. ஆதலால் நிதிசார் விளைவுகளில் ரூபா 14,296,599 ஆன முன்னேற்றத்தை காட்டுகின்றது. நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் வருமானம் 43% ஆல் அதிகரித்திருந்தமையே முக்கிய காரணமாகக் காணப்பட்டது.

3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில் இலக்கிடப்பட்ட வருமானம் ரூபா 170.5 மில்லியன் தொகையானதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 169.7 மில்லியன் அல்லது 99.5% எய்தப்பட்டிருந்தது. மேலும் மனிதக் குடியேற்றப் பிரிவில் வருமானத்தை எய்தும் சதவீதம் முறையே 44% ஆகக் காணப்பட்டதுடன் கட்டிட பொருட் பிரிவு, புவியியல் தொழிநுட்ப பொறியியல் பிரிவு, மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் சேவைப் பிரிவு, சுற்றாடல் பிரிவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு போன்ற பிரிவுகளில் இலக்கிடப்பட்ட வருமானத்தில் 70% இனைப் பார்க்கிலும் அதிகமான உழைப்பு எய்தப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

இடர் பாதுகாப்பினை அடிப்படையாயக் கொண்டு இலங்கை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கும் நிர்மாணத்துறையில் தீர்க்கமான அபிவிருத்திக்கு அவசியமான ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்ப சேவைகளை வழங்குவதும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதான செயற்பணியானதுடன் நடைமுறையில் மண்சரிவு அபாயம் உள்ள வலயத்தை வரைபடத்தில் குறித்து மண்சரிவைக் குறைக்கும் செயற்திட்டத்தை மேற்கொள்வது முதன்மையாக இருந்தது. இது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் செயற்பணி பின்வருமாறாகக் காணப்பட்டது.

(அ) மண்சரிவு ஆபத்துள்ள வலயத்தை வரைபடத்தில் குறித்தல்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற பண உதவியின் மூலம் மண்சரிவு அபாய வலயத்தை வரைபடத்தில் குறித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 1990 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை திறைசேரி மானியம் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 327.30 மில்லியன் தொகையான திறைசேரி மானியம் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இதற்காக ஏற்கப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 303.33 மில்லியனாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது வரைபடத்தில் குறித்தல் செயற்பாட்டிற்கு களுத்துறை மாவட்டத்தில் 16 வரைபடங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் முழுவதுமாக 16 வரைபடம் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) மண்சரிவைக் குறைக்கும் செயற்திட்டங்கள்

கண்டி, பதுளை, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மண்சரிவைக் குறைக்கும் செயற்திட்டம் ஒன்று 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் அச் செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக மொத்த மதிப்பீடு ரூபா 150 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இடர் முகாமைத்துவ நிலையத்தினால் கீழே காட்டப்பட்டவாறு நிதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

| ஆண்டு | இடர் முகாமைத்துவ நிலையத்தினால் பெறப்பட்ட நிதிகள் | ஏற்பட்ட செலவினம் |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2009 | 34.8 | 34.80 |
| 2010 | 51.0 | 35.00 |
| 2011 | - | 43.62 |

நிறுவனத்தின் மண்சரிவு, கல்வி மற்றும் சேவைப் பிரிவினால் இச் செயற்பணி நடாத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காகப் பெறப்பட்ட பணமாக உரிய பிரிவின் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்த மொத்தத் தொகையும் நிறுவகத்தின் செலவினத்தின் கீழேயே கணக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இச் செயற்திட்டம் மீளாய்வாண்டில் உள்ளவாறும் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் இவ்வாண்டின் போது ஏற்பட்ட தொகையான ரூபா 43.62 ஆன மொத்தச் செலவினமும் நடைமுறை வேலைகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மண்சரிவு தொடர்பான விசேட கற்கை மீதான அறிக்கைகள் வழங்கல்

இடர் ஆபத்துக்கள் உள்ள பகுதிகளில் மாவட்டச் செயலாளர்களினதும் பிரதேசச் செயலாளர்களினதும் வேண்டுகையில் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் விசேட கற்கைகளும் அறிக்கைகளும் வழங்கப்பட்டிருந்தன. திறைசேரியினால் ஒரு வருடத்திற்கு ரூபா 10 மில்லியன் தொகையான ஏற்பாடு தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்படுவதற்கு 2011 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. மீளாய்வாண்டின் போது தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் மாவட்டச் செயலக மற்றும் பிரதேசச் செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகையில் 190 மண்சரிவு ஆராய்ச்சிகளுக்காக ரூபா 3,221,885 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,085,939 தொகை ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 1,135,946 தொகை பெறவேண்டியிருந்தது.

ii. விசேட கற்கைகளும் அறிக்கைகளும் வழங்கப்படுவதற்குமாக ரூபா 3,411,229 தொகை பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதி தொடர்பான ஆய்வறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கு நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 21.5 மில்லியன் திறைசேரியிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதேநேரம் மீளாய்வாண்டின் போது ரூபா 19 மில்லியன் தொகையான மூலதனம் கொள்வனவு செய்யப்படுவதற்கான தேவைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், நிறுவனத்தினால் அக் கொள்வனவுத் திட்டத்தின் தேவைப்பாட்டைப் பார்க்கிலும் கூடுதலான பெறுமதியான அதாவது ரூபா 23.65 மில்லியன் தொகையான மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் திறைசேரியிடமிருந்து ரூபா 17 மில்லியன் தொகை இதற்காகக் கிடைக்கப்பெற்றிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட எல்லை மீறியதற்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொண்டமைக்கு கணக்காய்வில் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மண்சரிவைக் குறைப்பதற்கான செயற்திட்டத்தில், பதியபெலெல்ல மற்றும் பேராதனை போன்ற பிரதான செயற்திட்டங்கள் இரண்டின் பல்வேறு செயற்திட்டங்களுக்காக அமைப்பின் முகாமைத்துவ குழுக்களினால் ரூபா 35 மில்லியன் செலவினம் 40 விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தில் முக்கியமான 14 விடயங்களுக்காக ரூபா 30.16 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டு ரூபா 34.42 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 4 மில்லியன் மதிப்பீட்டைப்பார்க்கிலும் அதிகமாக செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், முகாமைத்துவத்தின் கட்டுப்பாடும் வழிநடத்தலும் முறையாக செயற்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்படுகின்றது.

(இ) மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது நடாத்தப்பட்ட இடைக்காலக் கூட்டத்தில் அமைப்பின் பிரதான கட்டிட வளவை மேம்படுத்தப்படுவதற்காக ரூபா 4.87 மில்லியன் தொகையான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அது ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு அமுலாக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

4.3 நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 274 ஆனதுடன் உள்ளபடியான பதவியணி 157 ஆகவும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 67 ஆகவும் காணப்பட்டது.

நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் தாபனக் கட்டமைப்பிற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் தேசிய சம்பளங்கள், ஆளணி ஆணைக்குழுவின் அங்கீகாரமும் 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டதன் காரணமாக வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பில் காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

5. கணக்களி தன்மையும் நல்லஆளுகையும்

5.1 கொள்வனவுத் திட்டம்

நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க கொள்வனவுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்படாததன் காரணமாக திறைசேரியில் இருந்து பெறப்பட்ட மூலதன மானியங்களுக்கு மேலாகக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட செலவின எல்லைகளுக்கு மேலாக 10 செலவினத் தலைப்பில் ரூபா 19,043,735 ஆன உள்ளபடியான செலவினம் உறப்பட்டிருந்தது. இச் செலவினங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லைகளுக்கு மேலாக 1.5% இற்கும் 99% இற்கும் இடையிலான வீச்சில் நிலவியது. எனினும் எல்லைகள் மீறப்பட்டு செலவினத்தை ஏற்றமைக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர்

(ஆ) பாதீடு

(இ) கொள்வனவுத் திட்டம்

(ஈ) முற்பணம் வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
Ministry of Disaster Management

ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානය
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
NATIONAL BUILDING RESEARCH ORGANISATION

දුරකතන / தொலைபேசி / Telephone: 011-2588946, 011-2503431, 011-2500354
අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: 011-2505149
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2502611
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.nbro.gov.lk
ඊමේල් / மின்னஞ்சல் / E-mail: nbro@sltnet.lk

99/1, ජාවත්ත පාර, කොළඹ 5.
99/1, ஜாவத்தை வீதி, கொழும்பு 5.
99/1, Jawatta Road, Colombo 5.

Our Ref} NBRO/DG/AUDIT/2011 Your Ref } DR/G/NBRO/FA/2011 Date } 17.10.2012

கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
இல 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல

<u>38 ஆம் இலக்க இலங்கை நிதிச்சட்டம் 1971 இன் பிரிவு 14(2) (சீ) இன் படி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 31 மார்கழி 2011 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை</u>

கணக்காய்வாளர் நாயகத்தின் 26 புரட்டாதி 2012 அன்று திகதியிடப்பட்ட அறிக்கை இல DR/G/NBRO/FA/2011 அமைவாக கீழ்வரும் விளக்கங்களை நான் சமர்ப்பிக்கின்றேன்.

<u>2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துக்கள்</u>

<u>2.2.1 வருமதி மற்றும் சென்மதி கணக்குகள்</u>

a) 38 கடன்பட்டோருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அவர்கள் இதற்கு இன்னும் பதிலளிக்கவில்லை. பெரும்பாலான கடன்கள் இக்கடிதங்கள் மூலம் மீளப்பெறப்படுள்ளன.

b) அனைத்து முயற்சிகளையும் எடுத்தும் சாதகமான பதில்கள் கிடைக்காத, 5-10 வருடங்கள் வரையான கடன்கள் பற்றிய விபரங்கள் தேசிய திறைசேரியிலமைந்துள்ள பொது நிதிகள் திணைக்களத்திடம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதன் செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்ப்ட்டுள்ளது.

c) சட்டமா அதிபர் திணைக்களம் 6ஆம் திகதி சித்திரை மாதம் 2010 அன்றி திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பயனாளியான ஆட்பதிவாளர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகையான ரூபா. 854,064 இனை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செலுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. எனினும் ஆட்பதிவாளர் திணைக்களம் 31-05-2010 அன்று திகதியிட்ட கடிதத்தில் தம்மிடம் இதனை திருப்பி செலுத்த போதிய பணம் இல்லை என தெரிவித்துள்ளது. எனவே குறித்த காரணங்களை கருத்திற் கொண்டு அக்குறித்த தொகையை எமது நிறுவனத்திற்கு வழங்குமாறு தேசிய பொதி நிதிகள் திணைக்களத்திடம் எழுத்துமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

d) ஏழு வருடங்களுக்கு முன்னதான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா. 1,857,489, எனினும் கடன்கொடுத்தோரிடத்தில் உரிய ஆவணங்கள் இல்லை.

1987 ஆம் ஆண்டு முன் கொண்டுவரப்பட்ட கடன் மீதியான ரூபா. 116,556 தொடர்பிலான கடன்கொடுத்தார் பற்றிய போதிய ஆவணங்கள் இல்லை. செலுத்தப்பட்ட கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவான ரூபா.1,740,566 இல் ரூபா.740,923 பட்டியலிடப்பட்ட தொகைக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் உள்ளக முகாமைத்துவ குழுவின் (Interim Management Committee) ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது.

e) தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன ஊழியர்களினால்/ அலுவலகர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி முற்பணங்களை ஒவ்வொரு ஆண்டிலும் மார்கழி 31க்கு முன்னர் மீளச்செலுத்துமாறு நிதிப்பிரிவு குறித்த ஊழியர்களை அறிவுறுத்தியுள்ளது. காசு முற்பணங்களை உரிய நேரத்தில் மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.3 சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் ஒத்துப்போகாத விடயங்கள்

**(a)** நிதி தொடர்பான ஒழுங்கு விதிகள்

**(i)** நிதி தொடர்பான ஒழுங்கு விதிகள் **371 (2) (b)**

நிதி ஒழுங்கு விதி 371 (2) (b) படி நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய பண முற்கொடுப்பனவான ரூபா.20,000 இனை பின்பற்றுவது கடினம். ஏனெனில் எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் களச் செயற்பாடுகள் மற்றும் ஆய்வுகள் என்பவற்றுடன் அதிகம் தொடர்புள்ளது. உதாரணம்;- ஏறத்தாழ மண்சரிவு அபாயக் குறைப்பு செயற்பாட்டிற்காக 01 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒழுக்க விதிகளில் குறிப்பிட்டவாறு செயற்த்திட்ட பண முற்கொடுப்பனவு எல்லை நிர்ணயிக்கப்படுமானால் செயற்த்திட்டத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகள் பாதிக்கப்படும். அது போலவே புவித்தொழில்நுட்ப பிரிவினால் இலங்கையின் பல பகுதிகளில் (யாழ்ப்பாணம் உட்பட) பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது இந்த ஒழுக்க விதி பின்பற்றப்படுமானால் குறித்த செயற்பாடுகள் பாதிக்கப்படும். அதுபோலவே மானிடக் குடியமர்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கும் உச்ச எல்லை விதிப்பது கடினம். ஆகவே எமது நிறுவனத்தினால் தூர இடங்களில் களச் செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகளை மேற்கொள்ளும்போது இந்த ஒழுக்க விதியை பின்பற்றுவது கடினமாகும். எனவே தான் இந்த உயர் பண முற்கொடுப்பனவு எல்லையை மாற்றியமைக்குமாறு நாம் திறைசேரியை கேட்டுள்ளோம். அத்துடன் அந்த அனுமதி கிடைக்கும்வரை இந்த உயர் பண முற்கொடுப்பனவு எல்லையை பின்பற்றுவது கடினமாகும்.

**(ii)** காசு முற்பணம்

காசு முற்பணங்கள் என்பது களச் செயற்பாடுகளுக்காக பெறப்பட்ட முற்பணங்களைக் குறிக்கும். அனேகமாக ஒரு அலுவலர் பல ஊழியர் குழுக்களுடன் சேர்ந்து ஒரு மாதத்திற்கு அல்லது தொடர்ச்சியாக குறித்த காலத்திற்கு வேலை செய்ய வேண்டி இருக்கும். இக் காலப்பகுதியில் குறித்த அலுவலர்க்கு பல்வேறு தேவைகளின் நிமித்தம் பணம் தேவைப்படும். உதாரணமாக, அந்த முற்பணமானது வாடகை, ஊழியர் கொடுப்பனவுகள், இயந்திரங்களுக்கான எரிபொருள், இயந்திரங்கள் பழுது பார்த்தல் செலவு, போக்குவரத்து செலவுகள் போன்ற பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படும். எனவே அத்தகைய முற்பணங்கள் குறுகிய காலத்தில் பல்வேறு தேவைகளுக்காக

பயன்படுத்தப்படும். அத்துடன் சில சமயங்களில் முன்னர் பெற்றுக்கொண்ட முற்பணத்தை செலுத்திவிட்டு அடுத்த முற்பணத்தை பெறுவது கடினமாகும். ஏனெனில் அத்தகைய நடவடிக்கைகள் செற்பாடுகளின் வினைத்திறனை பாதிக்கும். எவ்வாறாயினும் அலுவலகர்களுக்கு பெற்றுக்கொண்ட முற்பணத்தை இயன்றளவு மீள உரிய பற்றுச்சீட்டுக்களுடன் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் இத்தகைய குறைபாடுகள் திறைசேரியின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் சீராக்கப்பட்டுவிடும்.

(iii) நிதி தொடர்பான ஒழுங்கு விதிகள் 371 (2) ( b )

இந்த காசு முற்பணங்கள் பெரும்பாலும் கொழும்பிற்கு வெளியேயான நீண்ட கால செயற்த்திட்ட நடவடிக்கைகளுக்காகவே பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அத்தகைய முற்பணங்கள் களச் செயற்பாடுகளுக்காகவே பெறப்படுகின்றன. செயற்பாடுகளின் முடிவில் உரிய ஆதரங்களுடன் அவை சமர்ப்பிக்கப்படும். செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கொழும்புக்கு வந்து முற்பணங்களை ஆதரங்களுடன் சமர்ப்பிப்பது கடினமாகும். அத்துடன் அவ்வாறு செய்தால் குறித்த அலுவலர் அப்பகுதியில் இருப்பது குறைவதால் செயற்பாட்டின் வினைத்திறன் பாதிப்படையும். அத்துடன் சில சமயங்களில் குறித்த அலுவலர் அக்குறித்த பகுதியில் வேலை நிறைவடைந்தால் சிலசமயம் வேறு பகுதிகளுக்கு செல்லுமாறு கேட்கப்படலாம். அத்தகைய நிலைமைகளிலும் குறித்த ஊழியருக்கு கொழும்புக்கு வந்து உரிய பணத்தை மீள செலுத்துவது கடினமாகும். இவ்வாறான நிலைமைகளே பெரும்பாலும் அவதானிக்கப்படுள்ளன. அனேகமான செயற்த்திட்ட நடவடிக்கைகள் அவசரமாகவும் குறுகிய கால எல்லையிலும் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை. அத்துடன் அவற்றை கால எல்லைக்குள் நிறைவு செய்வது நிறுவனத்திற்கு பலனளிப்பதுடன் அவ்வாறு தவறும் பட்சத்தில் சில சமயங்களில் தண்டப்பணம் செலுத்த வேண்டி ஏற்படலாம். எவ்வாறாயினும் அலுவலர்களுக்கு, காசு முற்பணங்களை உரிய காலப்பகுதிகளில் செலுத்தி தற்போதைய நிலைமையினை மேம்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ii) நிதி தொடர்பான ஒழுங்குவிதிகள் 757(1) (b) மற்றும் 757 (2)

சிலசமயங்களில் பிரிவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளில் மேலதிகம் மற்றும் பற்றாக்குறை என்பன காணப்படலாம். ஆனால் நிறுவனம் என்ற ரீதியில் மேலதிகம் மற்றும் பற்றாக்குறை காணப்படக்கூடாது. நிறுவனத்தின் ஒரு பிரிவில் இருந்து இன்னொரு பிரிவிற்கு பொருட்களை அல்லது சில விடயங்களை மாற்றும்போதே மேலதிகம் அல்லது பற்றாக்குறை ஏற்படுகின்றன. எனவே இதனை தவிர்ப்பதற்கு உரிய ஆலோசனைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய ஆவண நடைமுறைகள் தொடர்பில் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

(b) பொது நிர்வாக சுற்றுநிருபம் இல 41/90 of 10 ஐப்பசி 1990

வாகனங்களின் எரிபொருள் பாவனையை பரிசோதிக்குமாறு உரிய அலுவலர்க்கு அறிவுறுத்தப்பட்டு பெரும்பாலான வாகனங்கள் பரிசோதிக்கப்படுள்ளன.

(c) நிறுவன சுற்றுநிரூபங்கள்

சுற்றுநிரூப இல:- **NBRO/CIR/2011/03 திகதி 07 சித்திரை 2011**

இந்த சுற்றுநிரூபமானது மாவட்ட அலுவலகங்களின் வேலை தொடங்கும் நேரத்தை உள்ளக ரீதியாக கட்டுப்படுத்தும் நோக்கத்தை கொண்டது. எனினும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி இது நடைமுறை சாத்தியப்படாத ஒன்று என்று புலப்பட்டதால் தற்போது இதனை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.4 அதிகாரம் அல்லது அனுமதி இல்லாமல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல்

மண்சரிவு அபாய தேசப்பட வரைதல் மற்றும் மூலதனப் பொருட் கொள்வனவு என்பனவற்றிற்கு ரூபா. 21.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இத் தொகையானது திறைசேரியினால் அனுமதியளிக்கப்பட்ட தொகைக்குட்பட்டதாகவே காணப்படுகிறது (இணைப்பு 1) அத்துடன் திறைசேரியிடம் அவ்வனுமதியளிக்கப்பட்ட தொகையின் மீதியினை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது (இணைப்பு 2). எனவே செலவுகள் அனைத்தும் திறைசேரியினால் அனுமதியளிக்கப்பட்ட தேசிய பாதீட்டிற்கமைவாகவே மேற்கொள்ளப்படுள்ளது.

3. நிதியியல் மீளாய்வு

3.1 நிதியியல் பெறுபேறுகள்

நிதியியல் பெறுபேறுகளனைத்தும் மேலதிக பரிசீலனைக்காக குறித்து வைக்கப்படுள்ளன

3.2 மீளாய்வு

சந்தையில் போட்டித்தன்மை காணப்படினும் ஆலோசனை சேவைகள் வழங்குவது தக்கவைக்கப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயல்திறன்

a) மண்சரிவு அபாய பகுதிகளை தேசப்படத்தில் வரைதல்

மேலதிக ஆய்வுகளுக்காக குறிக்கப்படுள்ளது

b) மண்சரிவு கட்டுப்படுத்துகைச் செயற்த்திட்டம்

மண்சரிவு கட்டுப்படுத்துகைச் செயற்த்திட்டத்திற்கான செலவுகள் அனைத்தும் ஆரம்பத்தில் நிறுவனத்தின் பொதுச்செலவாகக் காட்டப்பட்டு வந்தது. ஆயினும் 2012இல் இருந்து இது திருத்தப்பட்டுள்ளது.

மண்சரிவு கட்டுப்படுத்துகைச் செயற்த்திட்டத்திற்கான செயற்பாடுகள் அனைத்தும் 2011 இலேயே நிறைவு செய்யப்பட்டன. எனினும் அதற்கான நிதி கிடைக்கவில்லை எனவே அத்தொகை வருமதி கணக்கில் காட்டப்படுள்ளது. தற்போது அதற்கான பணத்தினை வழங்க திறைசேரி ஒப்புதலளித்துள்ளது.

c) மண்சரிவு தொடர்பான விசேட ஆய்வுகளின் அறிக்கைகளை வெளியிடல்

i. ரூபா 3,221,885 இனை ஏற்பட்ட செலவுகளுக்காக மீள செலுத்துமாறு கேட்ட போதும் ரூபா. 2,085,939 2011 இலும் மீதி ரூபா.1,135,946, 2012இலும் பெறப்பட்டது.
ii. மண்சரிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட அறிக்கைகளை வெளியிட்டதற்கான ரூபா.3,411,229 இனை மீளச்செலுத்துமாறு கேட்கப்பட்டது. அதில் ரூபா 1,135,946 மண்சரிவு அறிக்கை வெளியீட்டிற்கும் மீதியான ரூபா.2,275,283 ஆனது மண்சரிவு அபாய பகுதிகளில் கட்டட திட்டங்களை

அனுமதிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பான அறிக்கைகளுக்குமாகும். அதனடிப்படையில் திறைசேரியிடமிருந்து அனுமதியளிக்கப்பட்ட ரூபா. மில்லியன் 10இல், ரூபா.6,588,771 பெறப்பட்டது. மீதி ரூபா.3,411,229 ஆனது இறுதிக் கணக்குகளில் நடைமுறை சொத்தின் கீழ் வருமதியாக காட்டப்படுள்ளது. அத்தொகையானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடமிருந்து கிடைக்க வேண்டியுள்ளது (இணைப்பு 3)

<u>4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை</u>

a) திறைசேரியின் தேசிய பாதீட்டுத் திணைக்களமனது திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திடம் மூலதனப் பொருட்கள் வாங்க தேவையான ரூபா. 21.5 மில்லியனை வழங்குமாறு கோரியுள்ளது. அப்பொருட்களுக்கான விலைமனுக்கள் கோரப்பட்டு வழங்குனர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எனினும் பணத்தை திறைசேரியிடமிருந்து பெறுவதில் உள்ள தாமதம் காரணமாக நிறுவனத்தின் வருமானத்தில் இருந்தே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கொள்வனவில் ரூபா.501,281 பெறுமதியான அத்தியாவசிய ஆய்வுகூட உபகரணமும் உள்ளடங்குகின்றது. அத்துடன் ரூபா.1,650,00 மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்டு அதற்கு திறைசேரியின் அனுமதியும் கிடைத்துள்ளது.

b) ஆய்வு செய்யப்படும் 14 பொருட்களும் மண்சரிவு அபாய குறைப்பு செயர்த்திட்டதுடன் தொடர்பானவை. இந்த செலவு கூறுகள் சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், போக்குவரத்து, மூலப்பொருட் கொள்வனவு, ஒப்பந்தக்காரர்களுக்கான கொடுப்பனவு போன்றவற்றை உள்ளடக்கும். தொழில்நுட்ப குறைபாடுகள் காரணமாக செயற்த்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது செலவு மதிப்பீட்டிலும் செலவுகளிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. எனினும் செயற்த்திட்டத்தை உள்ளக முகாமை குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்குள் மேற்கொள்ள நடவடிக்கக் எடுக்கப்பட்டுள்ளது.

c) இடைக்கால முகாமைத்துவக் குழுவினால் நிறுவனத்தின் பிரதான கட்டிடத்தை மேம்படுத்த அங்கீகரிக்கப்பட்ட போதும் அதற்கான நிதி திறைசேரியிடமிருந்து கிடைக்கவில்லை. நிறுவனம் ஆலோசனை சேவைகள் மூலமாக பெற்ற வருமானத்தை செய்ற்பாட்டு மூலதனமாக பேண வேண்டியுள்ளதால் அதனை கட்டிட மேம்படுத்தலுக்கு பயன்படுத்த முடியாது.

**<u>4.3 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான நிறுவன பதவிநிலைகள் பிரிவு</u>**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவன பதவிகளுக்கமைய ஊழியர்களை சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**<u>5. நல்ல ஆளுகைக்கான பொறுப்பு கூறும் தன்மை</u>**

**<u>5.1 கொள்முதல் திட்டம்</u>**

நிறுவனத்தின் மூலதனப் பொருட் கொள்வனவானது ஏற்கனவே கொள்முதல் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட கால எல்லையினடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் அத்தியாவசிய ஆய்வுகூட உபகரணம் மற்றும் கள உபகரணங்கள் கொள்வனவு தொடர்பில் விலைமனுக்கள் கோரப்பட்டு ரூபா.500,000 பெறுமதியான கொள்வனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது நிறுவனத்தின் விலைமனு

பிரிவின் அங்கீகாரத்தினடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் கொள்வனவு திட்டத்தினையும் காலத்திற்கேற்ப மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

10 பாதீட்டு வகைக்குள் உள்ளடங்கும் செலவுக் கூறுகளுக்கான ஒதுக்கீடுகள் அதிகரித்துள்ளன ஏனெனில் பங்குனி 2011 முதல் ஒன்பது மாவட்ட அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்ட அலுவலகங்களின் நோக்கம் ஏதாயினும் கட்டடங்கள் அல்லது நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்து மண்சரிவு அபாய அறிக்கைகளை வழங்குவதாகும். 2011 இல் பாதீடு தயாரிக்கும்போது இந்த ஒன்பது மாவட்ட அலுவலகங்கள் திறக்கப்படுவது பற்றி தெரிந்திருக்கவில்லை. அதனால் பாதீட்டில் அதற்குரிய ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த அலுவலகங்களை ஆரம்பித்த பிறகு பாதீட்டு ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக செலவுகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது குறிப்பாக வாடகை, போக்குவரத்து, அச்சிடல் மற்றும் காகிதாதிகள், ஏனைய பொருட்களின் கொள்வனவு என்பவையே பிரதான செலவுக் கூறுகளாகும். இதனைவிட சில மண்சரிவு தொடர்பான ஆய்வுகளுக்கு எதிர்பார்த்ததை விட மேலதிகமாக பொருட்கள் தேவைப்பட்டன. எனவே செலவுகளும் ஒதுக்கீட்டிற்கு அதிகமாகவே இடம்பெற்றது.

எவ்வாறாயினும் இந்த அனைத்து செலவுகளும் நிறுவனத்தின் மொத்த வரவு செலவுத்திட்டத்தை அடிப்படையாக கொண்டே மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அனைத்து பாதீட்டு ஒதுக்கீடு மாற்றங்களுக்கும் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்படுவதுடன் தேவையான அனைத்து ஆவணங்களும் செலவுத்தாள்களுடன் இணைக்க வேண்டும்.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

நிறுவன முறைமைகளும் கட்டுப்பாடுகளும் தொடர்பிலான குறைபாடுகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

கலாநிதி (பொறியியலாளர்) ஆசிரி கருணாவர்தன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

**NATIONAL BUILDING RESEARCH ORGANISATION**
99/1, Jawatte Road, Colombo 5.
Tele: 011-2588946, Fax: 011-2502611
email : nbro@sltnet.lk, web : www.nbro.gov.lk